بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

சீரத்துன்நபி (ஸல்)
சிறப்பிதழ்

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ


தொகுதி
6
வருடாந்திர
சந்தா
ரூபாய் 575/-


# பதர்

வார இதழ் - காதியான்

Weekly
**BADAR** Qadian
TAMIL


இதழ்
39 - 40
ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர்
அ.அப்துர் ரஹ்மான்
தாஹிர்



Postal Reg.No. GDP-39/2020-2022 ஹிஜ்ரி கமரி 1443 ஸஃபர் 22-29. ஹிஜ்ரி ஷம்ஸி 1400 தபூக் 30 அஹா 7. செப்டம்பர் 30 அக்டோபர் 7-2021






மஸ்ஜித் நபவிய்யின் ஓர் அழகிய காட்சி



அனைத்து நபித்துவ தொடரிலும் உயர்தரமானவர்
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள்




இக்காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாம் நேர்மையுடன் பார்க்கும்போது நுபுவ்வத் தொடரில் (இறைத் தூதர் தொடரில்) மிக உயர் தகுதியுடையவராகவும், கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும் இறைவனின் பேரன்பிற்குரிய நபியாகவும் ஒருவரையே பார்க்கின்றோம். அவர் நபிமார்களின் தலைவரும், இறை தூதர்களின் மிகப் பெருமைக்குரியவரும், அனுப்பட்ட அனைவரின் கிரீடமும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார். அன்னாரின் நிழலின் கீழ் பத்து நாட்கள் செல்வதால் அதற்கு முன்பு ஆயிரம் வருடங்கள் வரை கிடைத்திராத ஒளி கிடைக்கின்றது.

(சிரோஜே முனீர், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 89)

எவரை இறைவன் உயர்ந்தவர் என்று கூறியுள்ளானோ
அவர் எவ்வளவு உயர்வானவராக இருப்பார்



ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறை தூதர் (ஸல்) அவர்கள் எந்த உயர் அந்தஸ்தை உடைய மனிதராக இருந்தார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்துகளை அறிந்து கொள்வதற்கு இந்த வசனங்களை கருத்தில் கொள்ள வேண்டும். (1) اِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ (நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தை பெற்றுள்ளீர் (68:5)). மற்றொரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: وَكَانَ فَضْلُ اللّٰهِ عَلَيْكَ عَظِيْمًا (அல்லாஹ்வின் (மா)பெரும் அருள் உம்மிடத்து உள்ளது. (4:114)) அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்களை மிகவும் உயர்ந்ததாக குறிப்பிட்டுள்ளான். மேலும் அன்னார் மீது செய்யப்பட்டுள்ள அருளையும் உயர்வானதாக கூறியுள்ளான். இப்போது எண்ணிப் பாருங்கள். எவரை இறைவன் மிகவும் உயர்வானவர் என்று கூறியுள்ளானோ அவர் எவ்வளவு உயர்வானவராக இருப்பார். இப்போது இந்த கண்ணியத்தை உடைய ரஸூலை விட்டு விட்டு வேறு ஒருவரை தலைவராக்கிக் கொள்ள எங்களுக்கு என்ன அவசியம் உள்ளது?

(குத்பாத்தே நூர் பக்கம் 464, குத்பா ஜுமுஆ 25 மார்ச் 1910)

அவர் எனது உயிர் ஆவார். எனது இதயம் ஆவார். எனது நோக்கம் ஆவார்



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

முஹம்மது (ஸல்) அவர்களின் மீதான அன்பு என்னுள் எவ்வாறு ஊடுருவி உள்ளது என்பதை அவர்கள் எங்கனம் அறிவார்கள். அவர் எனது உயிர் ஆவார்; எனது இதயம் ஆவார்; எனது நோக்கம் ஆவார்; எனது தேவை ஆவார். அவரது அடிமைத்துவம் எனது கண்ணியத்திற்கு காரணியாகும். அவரது காலடியில் அமர்வது சிம்மாசனத்தில் அமர்வதை விட உயர்வானதாக எனக்கு தோன்றுகிறது. அவரது வீட்டை சுத்தம் செய்வதற்கெதிரில் முழு உலக அரசாட்சியும் பொருளற்றதாகும். அவர் இறைவனின் நேசர் ஆவார். அவ்வாறிருக்க அவர் மீது நான் ஏன் நேசம் கொள்ளக்கூடாது? அவர் அல்லாஹ்வின் அன்பர் ஆவார். அவ்வாறிருக்க நான் ஏன் அவர் மீது அன்பு கொள்ளக்கூடாது? அவர் இறைவனின் நெருக்கத்தை பெற்றவர் ஆவார். அவ்வாறிருக்க நான் ஏன் அவரது நெருக்கத்தை தேடக் கூடாது?

(அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 503)

பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் | 2 |
| 3. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது சமுதாயத்திற்கு வழங்கிய பொன்னான அறிவுரைகள் | 3 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் | 4 |
| 5. | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் குத்பா ஜுமுஆ 20.10.2017 | 5 |
| 6. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் உளவியல் நிபுணர் ஆவார்கள் | 11 |
| 7. | ஏகத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகள் | 14 |
| 8. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்தான மன்னித்தல், பரிவு மற்றும் கண்டும் காணாமல் இருத்தல் | 18 |


لَا إِلٰهَ إِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُولُ اللهِ

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறைகூவல்

**எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கால்களை கழுவுவேன் என்று ரோமானிய கைசர் கூறியிருந்தார். மஸீஹைக் குறித்து ஒரு சாதாரண ஊழியர் கூட இவ்வாறு கூறியிருந்தார் என்பதை எவராவது நிரூபணம் செய்யட்டும். அதுபோன்ற நபருக்கு ஓராயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு**

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொலிவுமிகு இந்த அறைகூவலை அன்னாரின் புத்தகமான நூருல் குர்ஆன், ரூஹானி கஸாயினிலிருந்து நாம் முன் வைக்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் சிறப்புகளை வெளிப்படுத்துவதற்காக நூருல் குர்ஆன் என்ற பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிட்டார்கள். ஆனால் எண்ணற்ற பணிகளின் காரணமாக அதன் இரண்டு இதழ்களே வெளிவந்தது. இரண்டாவது இதழில் அதாவது நூருல் குர்ஆன் எண்.2ல் அன்னார் பாதிரி ஃபத்ஹ் மஸீஹ் (ஃபதஹ்கட் குர்தாஸ்பூர் மாவட்டம்) செய்த ஆட்சேபனைகளுக்கு பதில் வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் தூய துணைவியர்கள் மீதும் அந்த பாதிரி ஆட்சேபனை செய்திருந்தார். இங்கு நாம் பாதிரி ஃபத்ஹ் மஸீஹின் ஆட்சேபனையையும் அதன் பதிலையும் பதிவிடுகின்றோம். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஃபத்ஹ் மஸீஹிற்கு ஓராயிரம் ரூபாய் பரிசு வழங்குவதாக மிக கம்பீரமாக அறைகூவல் விடுத்திருந்தார்கள். உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த திருமணத்தை பாதிரி ஃபத்ஹ் மஸீஹ் ஆட்சேபனை செய்திருந்தார். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்பது வயது கொண்ட ஹஸ்ரத் ஆயிஷாவை திருமணம் செய்தார்கள். இது ஷரீஅத்திற்கு எதிரானதாகும். இவ்வாறு இது திருமணம் அல்ல. மாறாக, விபச்சாரம் ஆகும் (நவூதுபில்லாஹ்) என்று அவர் ஆட்சேபனை செய்திருந்தார். இந்த செயல் ஷரீஅத்திற்கு எதிரானது என்றால் பின்னர் ஃபாதிரி ஃபத்ஹ் மஸீஹ் திருக்குர்ஆனிலிருந்து இல்லையென்றாலும் குறைந்தபட்சம் தவ்ராத் அல்லது இஞ்ஜீலிலிருந்து ஒன்பது வயது சிறுமியை திருமணம் செய்வது ஷரீஅத்திற்கு எதிரானது என்று தெரிய வரும் ஆதாரத்தைக் காட்டியிருக்க வேண்டும். ஆனால் பாதிரி ஃபத்ஹ் மஸீஹ் எந்தவொரு இறை வேதத்திலிருந்தும் (ஆதாரம்) காட்டவில்லை. மாறாக, திருமணத்திற்கான வயது 18 ஆகும் என்ற ஆங்கில அரசாங்கத்தின் சட்டத்தை காட்டியுள்ளார். ஆங்கில அரசாங்கத்தின் இந்த சட்டத்தை ஆதாரமாக வைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் கீழ் இருந்திருந்தால் இந்த அரசாங்கம் அன்னாருடன் எவ்வாறு நடந்திருக்கும்? என்று பாதிரி கேட்கின்றார். பாதிரி ஃபத்ஹ் மஸீஹின் அறிவீனம் என்னவென்றால், ஒரு செயலை ஷரீஅத்திற்கு எதிரானதாக கூறிவிட்டு அதற்கான ஆதாரத்தை இறை வேதத்திலிருந்து கொடுக்காமல் ஆங்கில அரசாங்கத்திடமிருந்து கொடுக்கின்றார். இது தொடர்பாக ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை நாம் முன் வைக்கின்றோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவு இருக்கட்டும். உண்மையில் பாதிரிமார்கள் ஏளனத்திலும், அவதூறுகளிலும், ஏசிபேசுவதிலும் முதல் இடத்தில் இருக்கிறார்கள். எம்மிடத்தில் பாதிரிகளின் புத்தகங்களின் ஒரு பெரும் குவியல் உள்ளது. அதில் அவர்கள் தமது வாக்கியங்களை நூற்றுக்கணக்கான ஏச்சுப் பேச்சுக்களால் நிறைத்துள்ளனர்.

(நூருல் குர்ஆன் எண். 1, ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 375)

பாதிரிமார்கள் குறிப்பாக திருக்குர்ஆன் மீதும், ஸய்யிதுனா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய பரிசுத்தமான இருப்பின் மீதும் மிருகங்களைப் போன்று ஏன் தாக்குதல் தொடுக்கின்றனர்? இதை விளக்கியவாறு ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், கிருஸ்துவர்கள் திருக்குர்ஆனின் மீது மிகவும் வெறுப்படைந்து உள்ளனர். அந்த வெறுப்பிற்கான காரணம் என்னவென்றால், திருக்குர்ஆன் கிருஸ்துவ மார்க்கத்தின் அடிப்படையையே தகர்த்து விட்டது. அதாவது ஒரு மனிதன் இறைவன் ஆகுவதை பொய்ப்படுத்திக்காட்டி விட்டது. சிலுவைக் கொள்கையை தூள்தூளாக்கி விட்டது. கிருஸ்துவர்கள் பெருமிதம் கொண்டிருந்த இஞ்ஜீலின் போதனைகளை மிகவும் குறைபாடு கொண்டதாகவும், வீணானதாகவும் ஆதாரத்துடன் நிரூபித்து விட்டது. எனவே கிருஸ்துவர்களின் உணர்வுகள் நிச்சயம் மன இச்சைகளின் காரணமாக இவ்வாறு இருக்கக்கூடும். எனவே அவர் செய்த அனைத்து இட்டுக்கட்டுகளும் முறியடிக்கப்பட்டு விட்டன. (சஷ்மாயே மஸீஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 343)

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாதிரிகளின் நெஞ்சில் இஸ்லாம் பாராங்கற்களாக உள்ளது. ஏனென்றால் ஏனைய அனைத்து மார்க்கங்களும் அவர்களின் பார்வையில் பொருளற்றதாகும். இந்துக்களும் கூட கிருஸ்துவராக மாறி இஸ்லாத்திற்கு எதிராகவே புத்தகங்கள் எழுதுகின்றனர். ராம்சந்தர் மற்றும் டாகூர்தாஸ் ஆகியோர் இஸ்லாத்தை மறுப்பதற்காக தனது முழு ஆற்றலையும் செலவிட்டு புத்தகங்கள் எழுதினார்கள். விஷயம் என்னவென்றால், இஸ்லாம் மூலமே அவர்களுக்கு அழிவு ஏற்படும் என்று அவர்களின் உள் உணர்வு அவர்களுக்கு கூறியது. இதன் காரணமாக இயல்பாக அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. எதன் மூலம் அழிவு ஏற்படுமோ அதன் மீது அச்சம் ஏற்படுவது இயற்கையாகும். ஒரு கோழிக்குஞ்சு பூனையைப் பார்த்ததும் கத்த தொடங்கி விடும். அதேபோன்று பல்வேறு மார்க்கங்களை பின்பற்றுபவர்கள் பொதுவாகவும், குறிப்பாக பாதிரிமார்களும் இஸ்லாத்தை மறுப்பதில் மிகவும் அழுத்தம் கொடுக்கின்றனர். இது எதனால் என்றால் அவர்களுக்கு நம்பிக்கை உள்ளது. இன்னும் கூறப்போனால் அவர்களுக்கும் அவர்களின் உள்ளமே இவ்வாறு கூறுகின்றது. அதாவது இஸ்லாம் என்ற ஒரே மார்க்கம் தான் பொய்யான கலப்படத்தை அடித்து நொறுக்கி விடும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 110 – 2003 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது – தொடரும்....)

......☆......☆......☆......

**நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளை பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் [இவருக்காக பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருககின்றனர். எனவே] நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி[கள் நாயகம் [ஸல்] அவர்களு]க்கு எப்போதும் அருள் புரியுமாறும், சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்**

## திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் மகத்துவமிக்க அந்தஸ்து

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதல் (மனிதனுக்கு) ஸாலிஹ், ஷஹீத், சித்தீக் மற்றும் நபி போன்ற அந்தஸ்துகளை பெற்றுத் தரும்

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ
مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ
وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا

பொருள்: அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களான நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்கள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்தியாகிகள்), ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்கள் ஆவர். (4:70)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:

இவ்வசனத்தில் கவனிக்கத்தக்க ஏராளமான விஷயங்கள் உள்ளன. முதலாவது என்னவென்றால், الرسول என்பதன் பொருள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆவார்கள். அதாவது இந்த சிறப்பான தூதர் என்று பொருள்படும்.

இரண்டாவதாக, நீங்கள் இந்தத் தூதருக்கு கட்டுப்படுவீர்கள் என்றால் நீங்கள் சித்தீக்கள், நபிமார்கள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் ஆகியோரைச் சார்ந்த மக்களாகி விடுவீர்கள். இதனுடைய பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியே நபி வர முடியும். அதாவது அவர் இந்தத் தூதருக்கு கட்டுப்படக்கூடியவராக இருக்க வேண்டும். இந்த இடத்தில் مَعَ என்பதற்கு சில ஆலிம்கள் தரப்பிலிருந்து பிடிவாதமாக இந்தப் பொருள் கொடுக்கப்படுகின்றது. அதாவது அவர் அவர்களுடன் இருப்பார். ஆனால் அவர்களைச் சார்ந்தவராக இருக்க மாட்டார்.

இதற்கு ஆதாரமாக அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். حَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا அவர்கள் சிறந்த நண்பர்களாக இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது அவர்கள் நபிமார்களுடன் இருப்பார்கள். (ஆனால்) சுயம் நபியாக இருக்க மாட்டார்கள். இந்த வசனத்திற்கு செய்யப்படும் இந்த மொழியாக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்யப்படும் கடுமையான அவமரியாதை ஆகும். ஏனென்றால் அந்நிலையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறாக அமைந்து விடும்:

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படக்கூடியவர் நபிமார்களுடன் இருப்பார். ஆனால் நபியாக இருக்க மாட்டார். அவர் சித்தீக்களுடன் இருப்பார். ஆனால் சுயம் அவர் சித்தீக்காக இருக்க மாட்டார். அவர் ஷுஹதாக்களுடன் இருப்பார். ஆனால் சுயம் ஷஹீதாக இருக்க மாட்டார். அவர் நல்லடியார்களுடன் இருப்பார். ஆனால் சுயம் நல்லடியாராக இருக்க மாட்டார். திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்களில் مَعَ என்ற சொல் مِنْ என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, சூரா ஆலி இம்ரான் வசனம் 194, சூரா அந்நிஸா வசனம் 147, சூரா அல்ஹிஜ்ர் வசனம் 32 ஆகியவற்றைப் பாருங்கள்.இது மட்டுமின்றி இங்கு مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ என்பதற்குப் பிறகு مِنَ النَّبِيّٖنَ என்று கூறப்பட்டுள்ளது. இங்கு مِنْ பயானிய்யா என்று கூறப்படும். அதாவது அவர்களுடன் அவர்களைச் சார்ந்தவராக இருப்பார்கள் என்று பொருள்படும்.

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவது இறை நேசத்தை பெறுபதற்கு காரணியாக அமைகின்றது

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ۗ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

பொருள்: நீர் கூறுவீராக! (மக்களே) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். மேலும் உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் அருள் செய்பவனும் ஆவான். (3:32)

### அல்லாஹ்வும் வானவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அருளைப் பொழிவது என்பதன் பொருள் – நம்பிக்கையாளர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதற்கு கட்டளை உள்ளது

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ؕ
يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளை பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காக பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருககின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் (ஸல்) அவர்களு)க்கு எப்போதும் அருள் புரியுமாறும், சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்தைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திலிருந்து நமக்கு இது வெளிப்படுகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல்கள் எவ்வாறு இருந்தன என்றால் அல்லாஹ் அன்னாரை புகழ்வதற்கும், அல்லது நற்பண்புகளை பகிரங்கமாக அறிவிப்பதற்கும் எந்தவொரு சிறப்பான சொல்லையும் குறிப்பிடவில்லை. சொற்கள் கிடைத்திருக்கக்கூடும். ஆயினும் அவன் சுயமே பயன்படுத்தவில்லை. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செயல்களின் பாராட்டு என்பது மாபொரும் விஷயமாக இருந்தது. இதுபோன்ற வசனம் வேறு எந்தவொரு நபியின் மகிமைக்கும் பயன்படுத்தவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மாவில் உண்மையும், தூய்மையும் இருந்தது. அன்னாரின் செயல்கள் இறைவனின் பார்வையில் எந்த அளவிற்கு விருப்பத்திற்குரியதாக இருந்ததென்றால் இனி வரும் மக்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையில் ஸலவாத் ஓத வேண்டும் என்று அல்லாஹ் நிரந்தரமாக இந்த கட்டளையை வழங்கியுள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி1 பக்கம் 32 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் தமது சமுதாயத்திற்கு வழங்கிய பொன்னான அறிவுரைகள்

۞ سَمِعْتُ رَسُوْلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یَقُوْلُ: اَفْضَلُ الذِّکْرِ: لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَاَفْضَلُ الدُّعَاءِ: اَلْحَمْدُ لِلّٰہِ۔ (ترمذی، کتاب الدعوات، باب دعوۃ المسلم مستجابۃ)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு கூறக்கேட்டேன். சிறந்த திக்ர் ஏகத்துவ கலீமா ஆகும். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை என்ற விஷயத்தை ஒப்புக் கொள்வதாகும். மேலும் சிறந்த துஆ அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்பதாகும்.

۞ قَالَ لِیْ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ: اَلَا اَدُلُّکَ عَلٰی کَنْزٍ مِنْ کُنُوْزِ الْجَنَّۃِ؟ فَقُلْتُ بَلٰی یَا رَسُوْلَ اللّٰہِ! قَالَ: لَا حَوْلَ وَلَا قُوَّۃَ اِلَّا بِاللّٰہِ۔

(بخاری، کتاب الدعوات، باب قول لاحول ولاقوۃ الا باللہ)

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொர்க்கத்தின் கருவூலங்களில் ஒரு கருவூலத்தைக் குறித்து நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு கண்டிப்பாக கூறுங்கள் என்று நான் கூறினேன். லா ஹவ்ல் என்ற துஆவை ஒதுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் உதவியின்றி தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கும் என்னிடம் ஆற்றல் இல்லை. நன்மைகளை செய்வதற்கும் என்னிடம் ஆற்றல் இல்லை.

۞ عَنْ سَلْمَانَ الْفَارِسِیِّ رَضِیَ اللّٰہُ عَنْہُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ قَالَ: اِنَّ اللّٰہَ حَیِیٌّ کَرِیْمٌ یَسْتَحْیِیْ اِذَا رَفَعَ الرَّجُلُ اِلَیْہِ یَدَیْہِ اَنْ یَّرُدَّھُمَا صِفْرًا خَائِبَیْنِ۔ (ترمذی، کتاب الدعوات)

ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் மிகவும் வெட்கம் கொண்டவனும், மிகவும் கருணையாளனும், மிகவும் வாரி வழங்குபவனும் ஆவான். அடியார் அவனது சன்னிதானத்தில் தனது இரண்டு கரங்களையும் உயர்த்தும்போது அவன் அவர்களை வெறும் கையோடும், நிராசையுடனும் திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகின்றான். அதாவது உண்மையான உள்ளத்துடன் கேட்கப்படும் துஆக்களை அவன் மறுப்பதில்லை. மாறாக (இறைவன்) ஒப்புக் கொள்கின்றான்.

۞ عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ رَضِیَ اللّٰہُ عَنْہُ اَنَّ رَسُوْلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ قَالَ: مَا مِنْ اَحَدٍ یُسَلِّمُ عَلَیَّ اِلَّا رَدَّ اللّٰہُ عَلَیَّ رُوْحِیْ اَرُدُّ عَلَیْہِ السَّلَامَ۔

(ابوداؤد، کتاب المناسک، باب زیارۃ القبور)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எந்த நபர் என் மீது ஸலவாத் ஓதினாலும் அவருக்கு பதிலளிக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் எனது ரூஹை திருப்பி அனுப்பி விடுவான். நான் அவரது ஸலாத்திற்கு பதிலளிக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றான். (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதக்கூடியவருக்கு எப்படிப்பட்ட நற்கூலி கிடைக்கும் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே தரூதிற்கு பதிலளித்துக் கொண்டிப்பார்கள்).

۞ عَنْ جَرِیْرِ بْنِ عَبْدِ اللّٰہِ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ کُنَّا جُلُوْسًا عِنْدَ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ اِذَا نَظَرَ اِلَی الْقَمَرِ لَیْلَۃَ الْبَدْرِ فَقَالَ اِنَّکُمْ سَتَرَوْنَ رَبَّکُمْ کَمَا تَرَوْنَ ھٰذَا الْقَمَرَ لَا تُضَامُّوْنَ فِیْ رُؤْیَتِہٖ فَاِنِ اسْتَطَعْتُمْ اَلَّا تُغْلَبُوْا عَلٰی صَلٰوۃٍ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ وَصَلٰوۃٍ قَبْلَ غُرُوْبِ الشَّمْسِ فَافْعَلُوْا۔

(بخاری، کتاب التوحید والرد علی الجھمیۃ وغیرھم، باب قول اللہ وجوہ یومئذ ناضرۃ الی ربھا ناظرۃ)

ஹஸ்ரத் ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இருந்தோம். இரவு நேரமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 14 ஆம் நிலவை நோக்கிப் பார்த்தார்கள். மேலும் கூறினார்கள்: இந்த 14 ஆம் நிலவை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று நீங்கள் உங்களது இறைவனை எந்த தங்கு தடையின்றியும் காண்பீர்கள். நீங்கள் இந்த கண்ணியத்தை பெற முயற்சி செய்ய விரும்புகின்றீர்கள் என்றால் ஃபஜ்ர் மற்றும் அஸர் தொழுகையை உரிய நேரத்தில் தொழுவதிலிருந்து கவனக்குறைவாக இருக்காதீர்கள்.

۞ عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ مَنْ لَا یَشْکُرِ النَّاسَ لَا یَشْکُرِ اللّٰہَ۔

(ترمذی، باب ما جاء فی الشکر لمن احسن الیک)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எந்த நபர் மக்களுக்கு நன்றி செலுத்துவதில்லையோ அவர் இறைவனுக்கும் நன்றி செலுத்துவதில்லை. அதாவது ஒருவர் செய்த நன்மையின் விளைவாக ஒரு மனிதருக்கு ஓர் அருட்கொடை அல்லது நன்மை கிடைத்திருக்கும் என்றால் எங்கு அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது அவசியமோ அங்கு நன்மை செய்த அந்த நபருக்கு நன்றி செலுத்துவதும் அவசியமாகும்.

۞ عَنْ اَبِیْ مُوْسَی الْاَشْعَرِیِّ رَضِیَ اللّٰہُ عَنْہُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ قَالَ: مَثَلُ الَّذِیْ یَذْکُرُ رَبَّہٗ وَالَّذِیْ لَا یَذْکُرُہٗ مَثَلُ الْحَیِّ وَالْمَیِّتِ۔ وَرَوَاہُ مُسْلِمٌ فَقَالَ مَثَلُ الْبَیْتِ الَّذِیْ یُذْکَرُ اللّٰہُ فِیْہِ وَالْبَیْتِ الَّذِیْ لَا یُذْکَرُ اللّٰہُ فِیْہِ مَثَلُ الْحَیِّ وَالْمَیِّتِ۔ (بخاری، کتاب الدعوات، باب فضل ذکر اللہ تعالیٰ)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: திக்ரே இலாஹி செய்பவருக்கும் திக்ரே இலாஹி செய்யாதவருக்குமுரிய உதாரணம் உயிருள்ளவர் மற்றும் மரணித்தவர் போன்றதாகும். அதாவது இறைவனை நினைவு கூருபவர் உயிருள்ளவர் ஆவார். இறைவனை நினைவு கூறாதவர் மரணித்தவர் ஆவார்.

முஸ்லிமில் இவ்வாறு அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த வீட்டில் இறைவன் நினைவு கூறப்படுகிறானோ மற்றும் எந்த வீட்டில் இறைவன் நினைவு கூறப்படவில்லையோ அதற்கான உதாரணம் உயிருள்ளவர் மற்றும் மரணித்தவரைப் போன்றதாகும்.

......☆......☆......☆......

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் முழு உலகமும் இருளில் இருப்பதைக் கண்டார்கள். மேலும் அன்னாரின் வருகையின் மூலம் அந்த இருள் ஒளியாக மாறி விட்டது. எந்த சமுதாயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் தோன்றினார்களோ அந்த முழு சமுதாயமும் ஷிர்க் [இணைவைத்தல்] எனும் ஆடையைக் கலைந்து ஏகத்துவம் எனும் ஆடையை அணியாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் மரணமடையவில்லை**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்களின் வழிகாட்டல்கள்**

### ஸய்யிதுனா வ மவ்லானா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் மற்றும் கைருல் முர்ஸலீன் ஆவார்கள்

நமது மார்க்கத்தின் சாராம்சமும் அடிப்படையும் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவனும் இல்லை. முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் தூதராவார்) என்பதாகும். இவ்வுலக வாழ்வில் நாம் கொண்டுள்ள கொள்கையும் இவ்வுலகிலிருந்து நாம் பிரியும் வரை இறைவனின் அருளால் நம்முடன் இருக்கும் கொள்கையும் என்னவென்றால், எங்கள் ஆன்மீகத் தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் மற்றும் கைருல் முர்ஸலீன் ஆவார்கள்.

(இஸாலா அவ்ஹாம், பாகம் 1, ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 169)

### உயர்தரமான ஆண் மகனும், உயிருள்ள மற்றும் இறைவனுக்கு விருப்பமான நபியும்

நாம் நேர்மையுடன் பார்க்கும்போது நபித்துவ தொடர்ச்சியில் (இறைத்தூதர் தொடரின்) மிக உயர் தகுதியுடைய கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்பிற்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கின்றோம். அவர் நபிமார்களின் தலைவரும், இறைத்தூதர்களில் மிகப் பெருமைக்குரியவரும், அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா மற்றும் அஹ்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். ஆயிரம் வருடங்கள் வரை செல்வதால் கிடைக்க முடியாத ஒளி அன்னாரின் நிழலின் கீழ் பத்து நாட்கள் செல்வதன் மூலம் கிடைக்கின்றது.

(சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 82)

### ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நிரந்தரமான ஆன்மீக ஜீவிதம் கொண்டவரும், கம்பீரம் மற்றும் பரிசுத்தத்தின் அரியணையில் அமரக்கூடியவரும் ஆவார்கள்

பூமியில் வாழ்கின்ற அனைத்து மக்களே! கிழக்கு மற்றும் மேற்கில் வசிக்கும் மனித ஆன்மாக்களே! நான் முழுமையான அழுத்தத்துடன் உங்களை இதன் பக்கம் அழைக்கின்றேன். தற்போது பூமியில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே ஆகும். திருக்குர்ஆன் கூறுகின்ற இறைவனே உண்மையான இறைவன் ஆவான். நிரந்தரமான ஆன்மீக ஜீவிதம் கொண்டவரும், கம்பீரம் மற்றும் பரிசுத்தத்தின் அரியணையில் அமரக்கூடியவரும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவருடைய ஆன்மீக வாழ்க்கைக்கும், பரிசுத்தமான கம்பீரத்திற்கும் நமக்கு இந்த சான்று கிடைத்துள்ளது. அதாவது அன்னாரை பின்பற்றுவதாலும், அன்னார் (ஸல்) மீது அன்பு கொள்வதாலும் நமக்கு பரிசுத்த ஆவியும் இறைவனின் உரையாடல்களும் விண்ணின் அடையாளங்கள் போன்ற அருட்கொடைகளும் கிடைக்கின்றன.

(தர்யாக்குல் குலூப், ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 141)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் நேர்வழி காட்டக்கூடியவர் ஆவார்கள்

நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலக மனிதர்களின் ஆன்மீக தர்பிய்யத்திற்காக தோன்றி இருந்தார்கள். எனவே இந்த வடிவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மிக உயர்தரமான அந்தஸ்தில் காணப்பட்டிருந்தது. திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் ஹுஸூர் (ஸல்) அவர்களின் இந்த அந்தஸ்தைக் குறித்து சாட்சியம் வழங்கியுள்ளது. மேலும் அல்லாஹ்வின் பண்புகளுடன் அதே வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

مَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ (22:108)

அதேபோன்று قُلْ يٰٓاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا என்று கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் ஏனைய இடங்களை சீர்தூக்கிப் பார்ப்பதால் நமக்கு இந்த விஷயம் தெரிய வருகிறது. அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உம்மி நபி என்று கூறியுள்ளான். ஏனென்றால் அல்லாஹ்வைத் தவிர்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த ஆசிரியரும் இருந்திருக்கவில்லை. எனினும் அன்னார் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள்....

திருக்குர்ஆனைப் பார்த்து நமக்கு வியப்பு ஏற்படுகின்றது. அதாவது எழுதப்படிக்கத் தெரியாத அதே நபர் வேதம் மற்றும் நுட்பமான ஞானத்தை மட்டும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்ற வழிகளையும் கற்றுக் கொடுத்தார். எந்த அளவுக்கு என்றால் اَيَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ என்ற அந்தஸ்தை அடையச் செய்து விட்டார். பாருங்கள்! முழுமையாக ஆராய்ந்து பாருங்கள். திருக்குர்ஆன் எல்லா வகையான மாணவர்களையும் தனது நோக்கம் வரை சென்றடையச் செய்கின்றது. மேலும் ஒவ்வொரு நேர்மையான மற்றும் உண்மையின் மீது தாகம் கொண்டவர்களின் தாகத்தையும் தணிக்கின்றது. ஆயினும் எண்ணிப் பாருங்கள். இந்த நுட்பமான மற்றும் இறைஞானத்தின் நதி மற்றும் உண்மைத்துவங்களும், ஒளியின் ஊற்றும் யார் மீது இறங்கியது? அது ஒரு பக்கம் எழுதப்படிக்கத் தெரியாத நபர் என்று அழைக்கப்பட்ட முஹம்மது (ஸல்) அவர்கள் மீது இறங்கியது. மற்றொரு பக்கம் உலகத்தின் வரலாற்றில் காணக்கிடைக்காத முன்னுதாரணத்தைக் கொண்ட சிறப்புகளும், உண்மைத்துவமும் அன்னாரின் வாயிலிருந்து வெளிப்படுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 104 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே முழு உலகையும் இருளிலுருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருபவரும், ஏகத்துவத்தின் ஆடையை அணியச் செய்பவரும் ஆவார்கள்

நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மகத்துவமிக்க முஜத்தித் (சீர்திருத்தவாதி) ஆக இருந்தார்கள். அன்னார் (ஸல்) தொலைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இந்தப் பெருமிதத்தில் வேறு எந்த நபியும் பங்கு பெறவில்லை. அன்னார் (ஸல்) முழு உலகையும் ஓர் இருளில் இருப்பதைக் கண்டார்கள். பின்னர் அன்னாரின் வருகையின் மூலம் அந்த இருள் ஒளியாக மாறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகமும் இருளில் இருப்பதைக் கண்டார்கள். மேலும் அன்னாரின் வருகையின் மூலம் அந்த இருள் ஒளியாக மாறி விட்டது. எந்த சமுதாயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

*(தொடர்ச்சி 17 வது பக்கம்...)*

**நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ''كَانَ خُلُقُهُ الْقُرْاٰن'' (அன்னாரின் வாழ்க்கை குர்ஆனாக இருந்தது என்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய கூற்றை கூறியுள்ளார்கள்**

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

**நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர் என்றால் என்னைப் பின்பற்றுங்கள்**

اَللّٰهُمَّ اِنِّيْ أَسْئَلُكَ حُبَّكَ وَحُبَّ مَنْ يُحِبُّكَ وَالْعَمَلَ الَّذِيْ يُبَلِّغُنِيْ حُبَّكَ

**அல்லாஹ்வே! நான் உன்னிடம் உன்னுடைய நேசத்தை வேண்டுகிறேன். மேலும் எவர் உன்னுடன் நேசம் வைக்கிறாரோ அவருடைய நேசத்தையும் கேட்கின்றேன். உன்னுடைய அன்பை பெறக்கூடிய செயல்களை செய்வதற்கான பாக்கியத்தை உன்னிடம் கேட்கின்றேன் (நபிமொழி)**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதில் தன்னை மாய்த்துக் கொள்ளாதவரை எந்த ஒரு நபரும் உண்மையான நன்மை செய்யக்கூடியவராகவும், இறை திருப்தியை பெறக்கூடியவராகவும் ஆக முடியாது**

**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையான வகையில் பின்பற்றும்போதுதான் நல்ல விளைவுகளும் வெளிப்படும். இல்லையென்றால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற முழக்கமும், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற முழக்கமும் வெற்று முழக்கமாகும்**

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20 அக்டோபர் 2017 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** ஆற்றிய ஜுமுஆ பேருரை

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் கடந்த ஜுமுஆ குத்பாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றினை படித்துக் காட்டியிருந்தேன். அதில் அன்னார் முஸ்லிம்களின் பொதுவான நிலைமைகளைப் பற்றி கூறியிருந்தார்கள். அவர்களின் நிலை இவ்வாறு ஆகாமல் இருந்திருந்தால், அவர்கள் உண்மை இஸ்லாத்திலிருந்து வெகு தொலைவில் விலகிச் செல்லாமல் இருந்திருந்தால், அந்நிலையில் எனது வருகைக்கான எந்த அவசியமும் இருந்திருக்காது. இம்மக்களின் ஈமானிய நிலை மிகவும் பலவீனமாகி விட்டது. அவர்கள் இஸ்லாத்தின் பொருள் மற்றும் நோக்கத்தை முற்றிலும் அறியாதவர்களாக உள்ளனர்.

அதன் பிறகு அன்னார் இவ்வாறும் கூறுகின்றார்கள்: (இதனைப் பற்றி முன்னர் குறிப்பிடவில்லை.) எங்களிடம் இஸ்லாத்திற்கு எதிராக அப்படி என்ன விஷயம் உள்ளது? என ஏனைய முஸ்லிம்கள் நினைக்கின்றனர். நாங்கள் لَا اِلٰهَ اِلَّا اللّٰه எனக் கூறுகின்றோம். மேலும் தொழவும் செய்கின்றோம். நோன்பின் நாட்களில் நோன்பும் நோற்கின்றோம். ஸகாத்தும் கொடுக்கின்றோம் எனக் கருதுகின்றனர். ஆனால் நான் கூறுகின்றேன். (அவர்களின்) அனைத்து செயல்களும் நற்செயல்களின் நிலையில் இல்லை. அவர்களின் இந்த செயல்கள் நற்செயல்களாக இருந்திருந்தால் அதன் தூய விளைவுகள் ஏன் வெளிப்படுவதில்லை? (அவர்களின்) செயல்கள் எல்லா வகையான குழப்பங்கள் மற்றும் கலப்படத்திலிருந்து தூயதாக இருக்கும்போது தான் அவை நற்செயல்களாக இருக்க முடியும். ஆனால் இந்த விஷயம் இவர்களிடம் எங்கே உள்ளது?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 343; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆனால் இவர்களிடம் இந்த விஷயம் எங்கே உள்ளது? இன்று முஸ்லிம் நாடுகளிலேயே மிக அதிகமாக குழப்பங்கள் நிலவுவதை நம்மால் காண முடிகிறது. முஸ்லிம் பிரிவுகளில் குழப்பம் உள்ளது. ஒருவர் மற்றவரின் கழுத்தைத் துண்டிப்பதில் மும்முரமாக உள்ளனர். அனைவரும் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என ஓதுகின்றனர். ஆனால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று ஓதக்கூடிய ஒருவர் மற்றவரைக் கொலை செய்கின்றனர். அவரின் உரிமைகளைப் பறிக்கின்றனர். அவருக்கு ஏதாவது ஒரு வகையில் பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இதுதான் திருக்குர்ஆனின் போதனையா? இதன்படிதான் இவர்கள் செயலாற்றுகின்றனரா? இதுதான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் முன்மாதிரியா? அதனையே இவர்கள் பின்பற்றுகின்றனரா?

இன்று உலகில் எல்லா இடங்களிலும் உலகக் காரியங்கள் மேலோங்கி நிற்பதைப் (நாம்) பார்க்கின்றோம். அரசியலை ஒளிமயமாக்கிக் கொள்ள மட்டுமே மார்க்கத்தின் பெயரைப் பயன்படுத்துகின்றனர். மேலும், தத்தமது வட்டத்தில் தமது ஆட்சியை நிலைநாட்டுவதற்கோ அல்லது தக்க வைத்துக் கொள்வதற்கோ மட்டும் தான் மார்க்கத்தைப் பயன்படுத்துகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வார்த்தைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும். அன்னார் (ரலி) ''كَانَ خُلُقُهُ الْقُرْاٰن'' என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 305 ஹதீஸ் 25816 முஸ்னது ஆயிஷா (ரலி). பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் இல்மிய்யாவில் 1998 –ல் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் அன்னாரின் அன்றாட நடவடிக்கைகளை அறிய வேண்டும் என்றால், திருக்குர்ஆன் அன்னாரின் வாழ்க்கையின் விரிவுரையாக உள்ளது. அதனைப் படியுங்கள் எனக் கூறினார்கள்.

நம்பிக்கையாளர் மற்றும் தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் அதன்படி செயலாற்ற வேண்டும் என்பதற்காகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த முன்மாதிரிகளை நிலைநாட்டினார்கள். வெறும் முழக்கமிடுவதற்காக அல்ல. என்னுடன் உண்மையான தொடர்பு

வெறும் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' எனக் கூறி விடுவதால் மட்டும் ஏற்பட்டு விடாது என்றே அல்லாஹ்வும் கூறியுள்ளான்.

இன்னும் சொல்லப்போனால் எனது அன்பைப் பெற வேண்டுமென்றால், எனது அன்பிற்குரிய தூதரைப் பின்பற்றுங்கள். அவரின் முன்மாதிரிகளை கடைபிடியுங்கள். எனது அன்பிற்குரியவர்களாக ஆகி விடுங்கள். அந்நிலையில் அல்லாஹ்வின் நெருக்கத்திற்குரிய அந்தஸ்து உங்களுக்கு கிடைத்து விடும். அவ்வாறில்லையென்றால் உங்களின் முழக்கங்கள் வெற்று முழக்கங்களாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَاللهُ
غَفُوْرٌ رَّحِيْمٌ

நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அன்பு கொள்வான். மேலும் உங்கள் பாவங்களை மன்னித்து விடுவான். மேலும் அல்லாஹ் மிக அதிகமாக மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். (3:32)

அல்லாஹ் எவரை நேசிக்கின்றானோ அவரின் நிலை இன்றைய முஸ்லிம்களின் நிலையாக இருக்குமா? பாமர முஸ்லிம்கள் பொதுவாக ஆலிம்களை அல்லாஹ்வின் அன்பிற்குரியவர்களாகவும் அவனது நெருக்கத்தைப் பெற்றவர்களாகவும் கருதுகின்றனர். ஆனால் அவர்கள் தான் எல்லாரையும் விட அதிகமாக உலகில் குழப்பம் விளைவிக்கின்றனர். பாகிஸ்தானிலேயே சில விமர்சகர்கள் மற்றும் கட்டுரையாளர்கள் இதனை எழுதத் தொடங்கி விட்டனர். இந்த பெயர் தாங்கி ஆலிம்களே முஸ்லிம்களை இந்நிலைக்கு ஆளாக்கி விட்டனர் என்று ஏனைய ஊடகங்களிலும் கூறுகின்றனர்.

ஆக, இன்று முஸ்லிம் ஆலிம்களின் பொதுவான நிலைமைகளின் தேட்டம் என்னவெனில், ஒருவர் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் உண்மைத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அவரை அனுப்பி விட்டான். ஆனால், ஆலிம்களோ அவரின் பேச்சை தானும் கேட்பதில்லை. பொது மக்களையும் கேட்க விடுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றியவருக்கு எதிராக குஃப்ர் ஃபத்வாவைக் கொடுத்து பொதுவாக அச்சம் மற்றும் சண்டை சச்சரவு மற்றும் குழப்பத்திற்கான சூழலை உருவாக்கி விட்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது மேன்மையை நிலைநாட்ட மற்றும் உலகியல் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவே ஒரு ஜமாஅத்தை நிறுவினார்கள் (நவூதுபில்லாஹ்) என தினமும் அன்னார் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் என்பதை நாம் அறிவோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை புதுப்பிப்பதற்காகவும், பிரச்சாரத்தை முழுமை செய்வதற்காகவுமே அல்லாஹ் அன்னாரை அனுப்பினான். திருக்குர்ஆனின் அறிவும், ஞானமும், புரிதலும் அன்னாரின் மூலமாகவே நமக்கு கிடைத்துள்ளது. அன்னார் எல்லா சந்தர்ப்பங்களிலும் திருக்குர்ஆன் போதனைகளின் ஒளியில் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

ஆக, قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ என்ற வசனத்தின் பொருளை, விளக்கத்தை பல்வேறு கோணங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள். இவ்விஷயங்கள்தான் அல்லாஹ்வின் அன்பராக ஆக்கி அவனது நெருக்கத்தைப் பெற்றுத் தருவதாகவும், குழப்பங்களிலிருந்து பாதுகாக்கக் கூடியதாகவும் உள்ளன. தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும், தமது நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், இஸ்லாத்தின் மகிமை மற்றும் பொலிவை உலகில் வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் முஸ்லிம்களுக்கு இதனை தவிர்த்து வேறெந்த வழியுமில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையான வகையில் பின்பற்றும்போதுதான் நல்ல விளைவுகளும் வெளிப்படும். இல்லையென்றால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற முழக்கமும், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற முழக்கமும் வெற்று முழக்கமாகும்.

தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட வசனத்திற்கு வழங்கிய விளக்கவுரையை உள்ளடக்கிய அன்னாரின் சில மேற்கோள்களை நான் எடுத்துள்ளேன். ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களிடம் உள்ளார்ந்த பிரிவினைகளுக்கான காரணி கூட உலகின் மீதான மோகமேயாகும். அவர்களுக்கு அல்லாஹ் மீதான நேசம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருந்தால், இன்ன பிரிவின் கொள்கை மிகத் தெளிவானதாகும் என்பது மிக எளிதாக புரிந்து கொள்ளப்பட்டு அதனை ஒப்புக் கொண்டு ஒன்றுபட்டிருப்பார்கள். தற்போது உலக மோகத்தின் காரணமாகவே இந்த சீர்கேடு தோன்றி வருகிறது. அவ்வாறிருக்க இது போன்றவர்களை முஸ்லிம்கள் என எங்கனம் கூற முடியும்? அவர்களின் பாதங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டின் கீழ் இல்லை.

அல்லாஹ் கூறியிருந்தான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நண்பனாக்கிக் கொள்வான்.

அன்னார் கூறுகின்றார்கள்: தற்போது இறை நேசத்திற்குப் பதிலாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாகவும், உலக நேசத்தை அவர்கள் முன்னிலைப்படுத்தியுள்ளனர். இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் அழகா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன உலகவாதியாக இருந்தார்களா? அன்னார் வட்டி வாங்கி வந்தார்களா? (நவூதுபில்லாஹ்) அல்லது கடமைகளிலும், இறை கட்டளைகளைச் செயல்படுத்துவதிலும் அன்னார் கவனக் குறைவாக இருந்து வந்தார்களா? அல்லாஹ் நம்மை காப்பானாக! அன்னாரிடம் நயவஞ்சகம் இருந்ததா? அன்னார் மார்க்கத்தை விட உலகிற்கு முன்னுரிமை வழங்கினார்களா? சிந்தியுங்கள்! அன்னாரின் அடிச்சுவட்டின்படி நடந்து செல்லுங்கள். பின்னர் அல்லாஹ் எப்படியெல்லாம் அருள் செய்கின்றான் என்று பாருங்கள்!

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 348–349; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆனால், இன்று செயல்ரீதியாக முஸ்லிம்களின் நிலையும் அல்லாஹ்வின் செயல் சாட்சியமும் இதற்கு எதிராக உள்ளது. முஸ்லிம்களின் நிலை மிகவும் மோசமாகி வருகிறது என்பதற்கு சாட்சியாக அவை உள்ளன. ஒரு நாடும், மற்றொரு நாடும் போரிடுகின்றன. அந்நியர்களிடம் சென்று ஒரு முஸ்லிம் நாடு தனது மற்றொரு முஸ்லிம் நாட்டிற்கெதிராக போர் தொடுக்க பிச்சை எடுக்கின்றது. கடந்த நாட்களில் அமெரிக்க அதிபர் ஈரானிற்கு எதிராக மீண்டும் தடைகளை விதிக்க ஓர் அறிவிப்பு செய்தார். மேலும், அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றது. முழு ஐரோப்பாவும் ஏனைய நாடுகளும் அதற்கெதிராக உள்ளன. இங்கு இங்கிலாந்தில் ஆங்கிலேய பத்திரிகையாளர் ஒருவர் இவ்வாறு எழுதினார்: அமெரிக்காவின் இந்த செயலுக்கு மூன்று நாடுகளைத் தவிர முழு உலகமும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. அமெரிக்கா சரியாக செயல்படுகிறது என அந்த மூன்று நாடுகள் மட்டுமே கூறுகின்றன. ஒன்று சுயம் அமெரிக்கா இரண்டாவது இஸ்ரேல், மூன்றாவது சவூதி அரேபியா. சவுதி அரேபியா, ஒரு முஸ்லிம் நாட்டிற்கு எதிராக முஸ்லிம் அல்லாத ஒரு நாட்டிற்கு போர் தொடுக்க அனுமதி வழங்குகின்றது. இன்னும் சொல்லப்போனால், அந்நிய சக்தியுடன் கூட்டணி சேர்கின்றது.

ஆக, இதுதான் முஸ்லிம்களின் நிலையாகும். இதன் சித்திரத்தையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வரைந்துள்ளார்கள். நீங்களோ பிரிந்து கிடக்கின்றீர்கள். நீங்கள்

எங்கனம் அல்லாஹ்வின் அருளைப் பெற முடியும்? என்று அன்னார் கூறினார்கள். உண்மையான நன்மையை மனிதன் எப்படி செய்ய முடியும்? அல்லாஹ்வின் திருப்தியை மனிதன் எப்படி பெற முடியும்? அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து அவர்கள் எங்கனம் பயன்பெற முடியும்?

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கு இந்த அருட்கொடைகள் எங்கனம் கிடைத்தது என்பதை விவரித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகளை நிராகரிக்கக் கூடியவர் (நவூதுபில்லாஹ்) என ஃபத்வா கொடுக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் போதனைகளை அன்னார் நிராகரிக்கக் கூடியவர் என்றும் கூறப்படுகின்றது. அன்னார் கூறுகின்றார்கள்: நான் உண்மையாகவே கூறுகிறேன். எனது அனுபவத்தால் கூறுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தம்மை மாய்த்து கொள்ளாத வரை உயர் தரமான மனத் தூய்மையின் விளைவாக கிடைக்கின்ற அருட்கொடைகள், ஞானங்கள் மற்றும் ஆன்மீக காட்சிகளின் கனிகளைப் பெறக் கூடியவராகவும், உண்மையான நன்மையை செய்பவராகவும், இறை திருப்தியைப் பெறக் கூடியவராகவும் எவரும் ஆக முடியாது. உயர் தரமான மனத்தூய்மையைப் பெறும் நிலையை, அந்தஸ்தை ஒரு மனிதன் அடையும்போதுதான் அல்லாஹ்வின் புறமிருந்து அருட்கொடைகளும் பரக்கத்துகளும் கிடைக்கும்; ஆன்மீகக் காட்சிகள் வரும். இதற்கு திருக்குர்ஆனிலேயே ஆதாரம் உள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ என்ற இறைவனின் இந்த வாதத்திற்கான செயல் ரீதியான மற்றும் உயிருள்ள சான்று நான் ஆவேன் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 204; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது, இக்காலத்தில் இறைவன் என்னுடன் பேசுகின்றான். ஏனென்றால், நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்தொடர்வதில் என்னை மாய்த்துக் கொண்டேன். அல்லாஹ்வும் அதனால் என்னுடன் அன்புடன் நடந்து கொண்டான் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பு, நேசம் மற்றும் அன்னாரை முழுமையாகப் பின்பற்றுதலின் விளைவாகவே எனக்கு உயரிய அந்தஸ்து கிடைத்துள்ளது என்று அன்னார் கூறுகின்றார்கள். உலகம் எந்த நபரைக் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை குறைப்பவர் என கருதுகின்றதோ அவரே அன்னாரின் உண்மைப் பேரன்பர் ஆவார். எவர் உண்மையான பின்பற்றுதலை மேற்கொண்டாரோ அவர் மீது அல்லாஹ் அருள் செய்தான். தனது அன்பிற்குரியவர் மீது அன்பு கொண்டதன் காரணமாக இறைவனும் அவரை தனது அன்பராக்கிக் கொண்டான். இந்த முழுமையான பின்பற்றுதலின் விளைவாக அன்னாரிடம் அல்லாஹ் ஒப்படைத்த பணிகளைப் பற்றி அன்னார் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இழந்த கண்ணியத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவே அனுப்பட்டுள்ளேன். மேலும் திருக்குர்ஆனின் உண்மையை உலகில் வெளிப்படுத்துவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். இந்த அனைத்து பணிகளும் நடைபெறவே செய்கின்றன. ஆயினும் எவர்களின் கண்களில் திரை உள்ளதோ அவர்களால் இதனை கண்டு கொள்ள முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 14; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து இந்த வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நீர் அவர்களிடம் கூறுவீராக. இறை நேசராக ஆகி விட வேண்டுமென நீங்கள் விரும்பினால் அதற்கு ஒரே வழிதான் உள்ளது. என்னை நீங்கள் பின்பற்றுவதே அந்த வழியாகும். இது திருக்குர்ஆன் வசனத்தின் மொழியாக்கம் ஆகும்.

அந்த வசனம் தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: என்னைப் பின்பற்றுதல் எப்படிபட்ட விஷயம் என்றால், அது இறைவனின் கருணை மீது அவநம்பிக்கை அடைய விடுவதில்லை. மேலும், அது பாவங்கள் மன்னிக்கப்பட காரணியாக உள்ளது. மேலும் அது ஒருவரை அல்லாஹ்வின் நேசராக்கி விடும்.

அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றினால் அது பாவங்கள் மன்னிக்கப்பட காரணியாக அமையும். அது மட்டுமல்ல. மாறாக, அல்லாஹ்வின் நேசராக உங்களை மாற்றி விடும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வை நாங்கள் நேசிக்கின்றோம் என்ற உங்களின் வாதம் என்னை நீங்கள் பின்பற்றும்போதுதான் உண்மை என நிரூபணமாகும். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பது இந்த வசனத்திலிருந்து மிகத் தெளிவாக புலப்படுகின்றது.

அதாவது மனிதன், தான் சுயமாக உருவாக்கிக் கொண்ட இறை வணக்கங்கள் மற்றும் கடின முயற்சிகள் மூலமாக அல்லாஹ்வின் நேசராகவும் இறைநெருக்கத்தைப் பெற்றவராகவும் ஆக முடியாது. ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதில் தம்மை மாய்த்துக் கொள்ளாதவரை அவர் மீது ஒளிகளும், இறை அருட்களும் இறங்க முடியாது. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பில் எவர் மூழ்கி விடுகிறாரோ மேலும், எவர் அன்னாருக்கு கட்டுப்படுவதிலும் பின்பற்றுவதிலும் எல்லா வகையான மரணத்தையும் தம் மீது ஏற்படுத்திக் கொள்வாரோ அத்தகைய நபருக்கு ஈமானிய ஒளியும் அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து இரட்சிப்பைப் பெற்று தரும் அன்பும் நேசமும் வழங்கப்படும். மேலும், அது பாவங்களிலிருந்து விடுதலை மற்றும் இரட்சிப்பிற்குக் காரணியாக அமைகின்றது. இதே உலகில் அவர் ஒரு தூய வாழ்க்கையைப் பெறுகின்றார். மன இச்சைகள் மற்றும் உணர்ச்சிகள் எனும் மிகக் குறுகிய மண்ணறைகளிலிருந்து அவர் வெளியேற்றப்படுவார். இதன் பக்கமே கீழ்க்கண்ட ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَنَا الْحَاشِرُ الَّذِيْ يُحْشَرُ النَّاسُ عَلٰى قَدَمِيْ அதாவது, நான் ஆன்மீகமான முறையில் மரணித்தவர்களை உயிர்ப்பிக்கக் கூடியவன் ஆவேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 183; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின் தொடரக் கூடியவர்கள் அல்லாஹ்வின் நேசராக ஆகக் கூடியவர்கள் ஆவர்.

அடுத்து ஓரிடத்தில் அன்னார் இதனை மேலும் விளக்கியவாறு கூறுகின்றார்கள்: மகத்துவமிக்க நற்பாக்கியத்தைப் பெறுவதற்கு அல்லாஹ் ஒரேயொரு வழியை மட்டுமே வைத்துள்ளான். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ என்று இந்த வசனத்தில் அல்லாஹ் தெளிவாகக் கூறி விட்டான். அதாவது, வாருங்கள். என்னைப் பின்பற்றுங்கள். அந்நிலையில் அல்லாஹ்வும் உங்களை நண்பனாக்கிக் கொள்வான்.

வெறும் சடங்காக இறை வணக்கம் செய்யுங்கள் என்பது அதன் பொருளல்ல. மார்க்கத்தின் உண்மைத்துவம் இதுவே என்றால் தொழுகை என்பது என்ன? நோன்பு என்பது என்ன? ஒரு விஷயத்தை தானே தடுத்து நிறுத்தி விட்டு பின்னர் தானே அதனை அனுமதிப்பது எப்படி சரியாகும்? சடங்கு ரீதியிலான தொழுகைகள் கூடாது. தொழுகையை அதற்குரிய வகையில் தொழுங்கள். தொழுகைக்குரிய நேரங்களைப் பேணுவதும் அவசியமாகும். அடுத்து நீங்கள் அல்லாஹ்வுக்கு முன் நிற்பது போன்று தொழ வேண்டும். இல்லையென்றால் மற்ற அனைத்தும் சடங்குகளாகும். இதன் பெயர் இஸ்லாம் அல்ல. மாறாக இஸ்லாம் என்பது ஆட்டினைப் போன்று கழுத்தை வைத்து விடுதல் ஆகும்.

உதாரணமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது வாழ்வும், மரணமும், தொழுகையும், தியாகங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. எல்லாரையும் விட முதலில் நான் என் கழுத்தை வைக்கின்றேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 186; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, உண்மையான பின்பற்றுதலை மேற்கொள்பவர் தமது இறை வணக்கத்தின் தரத்தையும் மேம்படுத்த வேண்டும். அனைவரும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த அடிப்படையிலும் அதற்கான அவசியம் உள்ளது. இல்லையென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாக செய்கின்ற நமது வாதமும் வெற்று வாதமாகவே அமையும்.

அடுத்து அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் அல்லாஹ்விடம் அன்பு கொள்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அதன் விளைவாக அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும், உங்கள் பாவங்களையும் மன்னித்து விடுவான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மனிதன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி நடக்காதவரை அவனால் அல்லாஹ்விடமிருந்து நன்மைகளையும் பரக்கத்துக்களையும் பெறவே முடியாது. மேலும், அவனது பாவம் நிறைந்த வாழ்க்கையையும் மனஇச்சைகள் எனும் நெருப்பையும் தணிக்கக் கூடிய இறை ஞானமும், அகப்பார்வையும் மனிதனுக்கு கிடைக்கவே முடியாது. அந்நிலையை அடைந்த எனது சமுதாயத்தின் ஆலிம்கள் பனி இஸ்ராயீலின் நபிமார்களைப் போன்றவர்கள் என்ற நபிமொழியின் பொருளுக்கு உட்பட்ட மக்கள் ஆவர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 96–97; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

மன இச்சைகள் எனும் நெருப்பை தணிக்க வேண்டுமென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவது அவசியமாகும். அன்னாரின் முன்மாதிரியின் வழி நடக்க வேண்டும். அல்லாஹ்வின் உண்மையான ஞானங்களைப் பெற வேண்டுமென்றால், அவனது அன்பிற்குரியவராக மாற வேண்டுமென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அவசியமாகும். பாவம் நிறைந்த வாழ்க்கையில் இருந்து இரட்சிப்புப் பெற வேண்டுமென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். எனது சமுதாயத்தின் ஆலிம்கள் பனீ இஸ்ராயீலின் நபிமார்களைப் போன்றவர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய அந்த அந்தஸ்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழி நடப்பவர்கள் அடைந்து விடுகின்றனர்.

(அல்மவ்லூஆத்துல் குப்ரா. முல்லா அலி காரி (ரஹ்) அவர்கள் எழுதிய நூல் பக்கம் 159 ஹதீஸ் எண் 614 கராச்சியிலுள்ள ஆராம்பாகிலுள்ள கதீமி குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஆனால், இன்றைய காலத்து ஆலிம்கள் அதில் அடங்க மாட்டார்கள். அவர்கள் இந்த அந்தஸ்தைப் பெறக் கூடியவர்கள் அல்ல. ஏனென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் தொடரும் அருட்களை ஏற்றுக் கொள்பவர்களாக அவர்கள் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் அருட்கள் கிடைக்கும் என்று அவர்கள் கருதுவது கிடையாது.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து குறித்து அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்து என்னவென்றால், அன்னார் இறை நேசராகத் திகழ்ந்தார்கள். ஆயினும், அல்லாஹ் ஏனைய மக்களுக்கும் அந்த அந்தஸ்தை அடைவதற்குரிய வழியைக் கூறியுள்ளான்.

உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ அதாவது, நீர் கூறுவீராக: நீங்கள் இறைநேசராக ஆக வேண்டுமென்றால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை தனது அன்பிற்குரியவர்களாக ஆக்கிக் கொள்வான். அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் இந்த அறிவிப்பை செய்ய வைத்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் என்பது இறை நேசராக ஆக்கி விடுகின்றது என்றால் அதை விட வேறு என்ன வேண்டும்? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 65 – 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமலேயே இரட்சிப்பு கிடைக்க முடியும் என்று கூறும் நபர் பொய்யர் ஆவார். இறைவன் எமக்கு புரிய வைத்த விஷயம் அந்த நபரின் கூற்றிற்கு முற்றிலும் எதிரானதாகும். அல்லாஹ் கூறுகின்றான்: قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ

தூதரே! முஹம்மது (ஸல்) அவர்களே! இம்மக்களிடம் கூறுவீராக: நீங்கள் இறைவனிடம் அன்பு கொள்கின்றீர்கள் என்றால் வாருங்கள் என்னைப் பின்பற்றுங்கள். நீங்கள் இறை நேசராக ஆகி விடுவீர்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்காமல் எந்த மனிதரும் இரட்சிப்பைப் பெற முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக காழ்ப்புணர்ச்சி கொண்ட மக்களுக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 434–435; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இதுவே நமது ஈமானின் அம்சமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர் தகுதி குறித்து ஒரு கிறிஸ்துவருடன் அன்னார் விவாதம் செய்து கொண்டிருந்த போது, கேள்வி பதில் நடந்து வந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மேன்மை குறித்து இந்த ஆதாரத்தை அவர் முன் வைத்தார். அவர் கூறினார்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களோ என்னிடம் வாருங்கள். நீங்கள் சோர்வடைந்துள்ளீர்கள். நான் உங்களுக்கு சுகமளிப்பேன். நான் ஒளியும், வழியுமாக உள்ளேன். நான் வாழ்வும், வழியுமாக உள்ளேன் என்று கூறினார். அதாவது, நான் வாழ்வளிப்பவனாகவும் வழிகாட்டியாகவும் உள்ளேன். என்னிடம் வாருங்கள் என அவர் தன்னைக் குறித்து கூறியுள்ளார். இதனைக் குறிப்பிட்டு விட்டு இஸ்லாத்தின் தோற்றுனரும் தன்னை குறித்து இதுபோன்ற கூற்றுகளைக் கூறியுள்ளாரா? என அந்த கிறிஸ்துவர் கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த நபருக்கு பதிலாகக் கூறினார்கள்: قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, நீர் அவர்களிடம் கூறுவீராக! நீங்கள் இறைவனிடம் அன்பு கொள்கின்றீர்கள் என்றால், வாருங்கள்! என்னைப் பின்பற்றுங்கள். அந்நிலையில் இறைவனும் உங்களிடம் அன்பு கொள்வான். மேலும் உங்கள் பாவங்களை மன்னிப்பான்.

என்னைப் பின்பற்றுவதால் மனிதன் இறை நேசராக ஆகி விடுகின்றான் என்ற இந்த வாக்குறுதி மஸீஹின் முந்தைய வாதத்தைவிட மேன்மைமிக்கதாகும். மனிதன் இறைவனின் அன்பராகி விடுவதை விட மேன்மைமிக்க அந்தஸ்து வேறெதுவும் இல்லை. ஒளி பெறுவீர்கள் என்றே மஸீஹ் கூறினார். ஆனால் இங்கு என்னை பின்பற்றுங்கள்; எவர் என்னைப் பின்பற்றுவாரோ அவர் இறை நேசராகி விடுவார். அவரது பாவங்களும் மன்னிக்கப்படும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அறிவிப்பு செய்யும்படி இறைவன் கூறினான். எவரது வழி நடப்பதால் மனிதன் இறை நேசராகி விடுகின்றானோ அவரை விட அதிகமாக வேறு எவர் தம்மை ஒளி என்று அழைக்க முடியும்?

(சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கே ஜவாப். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 372)

இந்த சம்பவம் நடந்த காலக்கட்டம் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் அப்போது எல்லா பக்கமும் கிறிஸ்துவ பாதிரிகள் கிறிஸ்துவத்தைப் பிரச்சாரம் செய்து வந்தனர். இந்தியாவில்

இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறிஸ்துவர்களாக மாறி இருந்தனர். இஸ்லாத்தை தற்காத்துக் கொள்கின்ற இந்த நற்பேறு முஸ்லிம் ஆலிம்களுக்கோ அல்லது முஸ்லிம் தலைவர்களுக்கோ கிடைக்கவில்லை. முஸ்லிம் அல்லாதவர்களின் வாயை அடைக்கும் வகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மை மற்றும் கண்ணியத்தைப் பறைசாற்றும் ஆதாரங்களை எடுத்து வைக்கும் நற்பேறு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதுபோன்ற காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள்தான் எதிரிகளை எதிர் கொண்டார்கள். இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை உலகிற்கு எடுத்துரைக்க அல்லாஹ் அன்னாரையே அனுப்பி இருந்தான்.

அடுத்து, கிறிஸ்துவ பாதிரிகள் இஸ்லாத்தின் மீது தொடுத்த தாக்குதல்களை அல்லாஹ்வின் இந்த வீரர், ஆதாரங்கள் மற்றும் சான்றுகளின் ஒளியில் தடுத்தார்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, அன்னார் அவற்றை தூள் தூளாக்கினார்கள் என்பதற்கு இந்திய வரலாறு சாட்சியாக உள்ளது. அக்காலத்து முஸ்லிம்களும் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர். வரலாற்றில் அந்தக் கூற்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. மாறாக, நமது எதிரிகளாக இருக்கின்ற இக்காலத்து சில ஆலிம்களும் இவ்விஷயங்களை ஒப்புக் கொண்டுள்ளனர். தற்போது டாக்டர் இஷ்ஹாருல் ஹக் அவர்கள் மரணித்து விட்டார்கள். அவர் சில ஆண்டுகளுக்கு முன் இதனை ஒப்புக் கொண்டார். அவர் கூறினார்: உண்மையில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மட்டுமே இஸ்லாத்தை பாதுகாத்தார்கள். எவ்வாறிருப்பினும் இது உண்மையாகும். அன்னார் மட்டுமே இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரை மேலோங்கச் செய்தார்கள். வேறெந்த முஸ்லிம் ஆலிமிற்கும் இதற்கான நற்பேறு கிடைக்கவில்லை.

அடுத்து, قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ என்ற இந்த வசனத்திலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்திற்கான சான்றையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விண்ணில் உயிருடன் இருப்பதாக இன்றும் கூட அரேபியர்கள் பொதுவாக நம்புகின்றனர். மிக உறுதியான நம்பிக்கையுடன் உள்ளனர்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அந்த கருத்தை ரத்து செய்தவாறு கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்தவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர் மட்டுமே நம்பிக்கையாளர் ஆவார்.

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ என்று அல்லாஹ் கூறியபடி அத்தகைய நபர்தான் இந்த அந்தஸ்தை அடைய முடியும். அதாவது, நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அந்நிலையில் இறைவன் உங்களை தனது அன்பிற்குரியவர்களாக ஆக்கிக் கொள்வான்.

அன்பின் தேட்டம் என்னவென்றால், அன்பிற்குரியவரின் செயலுடன் சிறப்பான நேசமும் ஒரு தொடர்பும் இருக்க வேண்டும். மரணிப்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத் (நடைமுறை) ஆகும். அன்னாருக்கு மரணம் நிகழ்ந்தது. அன்னார் மரணித்துக் காட்டினார்கள். அவ்வாறிருக்க வேறெவர் உயிருடன் இருக்க முடியும்? அல்லது உயிருடன் இருக்க ஆசை கொள்ள முடியும். அல்லது இன்ன நபர் உயிருடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொள்ள முடியும்? உண்மையிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்ட ஒருவர் வேறொரு நபர் எப்போதும் உயிருடன் இருக்க வேண்டும் என ஒருபோதும் ஆசைப்படமாட்டார். வேறொரு நபர் உயிருடன் உள்ளார் என்ற கொள்கையின் மீது அவர் நம்பிக்கையும் வைத்தல் கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பில் எந்த அளவிற்கு தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்றால், தனது மன உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்தல் வேண்டும். நான் யாருடைய உம்மத்தைச் சார்ந்தவன் என சிந்திக்க வேண்டும். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் எதிர்பார்ப்பு ஆகும்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இன்று வரை உயிருடன் உள்ளார்கள் என அன்னாரைப் பற்றி எவர் நம்பிக்கை கொள்வாரோ அத்தகைய நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்ட – தாகவும், அன்னாரைப் பின்பற்றுவதாகவும் எப்படி வாதிட முடியும்? ஏனென்றால் அந்நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மஸீஹை மேன்மைமிக்கவராக ஆக்குவதை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மரணித்தவர் என்று கூறப்படுவதையும் அவர் ஒப்புக் கொள்கிறார். ஆனால், ஈஸா (அலை) உயிருடன் இருப்பதாக உறுதியாக நம்புவதையே அவர் விரும்புகின்றார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 228–229; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒருபக்கம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதாகவும், அன்னாரைப் பின்பற்றுவதாகவும் வாதிடுகிறார். மற்றொரு பக்கம், மஸீஹ் உயிருடன் உள்ளார் என்று கூறுவதன் மூலம் அவரை மேன்மைமிக்கவராக ஆக்கி விடுகின்றார்.

ஆக, இன்று, இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தைப் பாதுகாத்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மட்டுமே ஆவார்கள். அன்னாரே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையை நிலைநாட்டினார்கள். இதுவே அன்னாரின் வருகையின் நோக்கமாகும். இதனையே ஆலிம்கள் எப்போதும் ஆட்சேபனை செய்து வருகின்றனர்.

உயிருள்ள நபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கு எதிராக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் விண்ணில் அமர்ந்துள்ளார் என்று இம்மக்கள் கூறுகின்றபோது பாதிரிகளுக்கு குற்றங் குறை கூற சந்தர்ப்பம் கிடைத்து விடுகின்றது. அவர்கள் உடனடியாக கூறுகின்றனர். உங்களது தூதர் மரணித்து விட்டார். அவரோ மண்ணில் புதையுண்டு விட்டார். (அல்லாஹ் நம்மைக் காப்பானாக.) டி.வி சேனல்களிலும் இதுவே நடந்துள்ளது. இதனால் அரபு உலகில் நிம்மதியற்ற நிலை உருவானது. இறுதியில் நமது சான்றுகளைக் கேட்டபோது, M.T.A – வில் ஹிவாருல் அரபு என்ற நிகழ்ச்சியைப் பார்த்த போது ஏராளமான மக்கள் அதை விரும்பினார்கள். இந்த சான்றுகளையும் ஏற்றுக் கொண்டனர். ஆயினும் ஆலிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஈஸா உயிருடன் இருக்கிறார். அவர் விண்ணுலகைச் சார்ந்தவர் என்றும், அத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்றும் கூறி அன்னாரை இழிவுபடுத்துகின்றனர். இதன் மூலம் கிறிஸ்துவ பாதிரி உங்கள் நபி மரணித்து விட்டார் எனக் கூறுகின்றனர். அத்துடன் ஹஸ்ரத் ஈஸா உயிருடன் உள்ளார். அவர் விண்ணுலகைச் சார்ந்தவர் எனக் கூறுகின்றனர். அத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையில் அவர் மரணித்தவர் (நவூதுபில்லாஹ்) என்றும் கிறிஸ்துவர்கள் கூறுகின்றனர். இதுவே அவர்களின் பிரச்சாரமாக உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிந்தித்துப் பதில் கூறுங்கள். தூதர்களில் சிறந்தவர், நபிமார்களின் தலைவர் என ஒரு தூதர் மீது நம்பிக்கை கொண்ட பிறகு இவர்கள் அன்னாரின் மேன்மைக்கு களங்கம் சேர்க்கவில்லையா? நிச்சயம் இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு களங்கம் கற்பிக்கின்றனர். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் குற்றத்தைச் செய்கின்றனர்.

ஹஸ்ரத் ஈஸா உயிருடன் உள்ளார் என்ற கொள்கை கொண்ட முஸ்லிம் மக்கள் பாதிரிகளுக்கு ஏளனம் செய்ய வாய்ப்பு வழங்கினர். அதற்கு தண்டனையாகவே பிரிவினையும், துர்பாக்கிய நிலையும் இவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது என நான் நம்புகிறேன். இன்றைய முஸ்லிம்களின் நிலைக்கு இதுவே காரணமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் தமது நாவினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்து தூதர்களிலும் சிறந்தவர்கள் என ஒரு பக்கம் கூறுகின்றனர். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 63 ஆண்டுகளுக்குப் பிறகு மரணித்து விட்டார்கள். ஆனால் மஸீஹ் இன்றளவும் உயிருடன் இருக்கிறார். அவர் மரணிக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி وَكَانَ فَضْلُ اللهِ عَلَيْكَ عَظِيمًا என அல்லாஹ் கூறுகின்றான். அதாவது உம் மீது அல்லாஹ்வின் மாபெரும் அருள் உள்ளது. அவ்வாறிருக்க அல்லாஹ்வின் இந்த கூற்று தவறானதா என்ன? இல்லை. இது முற்றிலும் சரியானதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்தவர் எனக் கூறுபவரே பொய்யர் ஆவார். மரணித்தவர் எனக் கூறுவதை விட இழிவிற்குரிய வார்த்தை வேறெதுவும் இருக்க முடியாது.

உண்மை என்னவென்றால், வேறெந்த நபியிடமும் இல்லாத மேன்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஜீவிதத்தை மேன்மைக்குரியதாக நான் கருதுகிறேன். அன்னாரின் ஜீவிதத்தை எடுத்துரைக்காத நபர் என் பார்வையில் காஃபிர் ஆவார். எந்த நபியின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக இவர்கள் தம்மை கூறிக் கொள்கின்றனரோ அவரையே மரணித்தவர் (அல்லாஹ் காப்பானாக) எனக் கூறுகின்றனர். இது எவ்வளவு வேதனை மிக்க விஷயமாகும்?

மேலும், ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ (அதாவது, அவர்கள் மீது இழிவும் ஏழ்மையும் வந்தது) என்பது எந்த நபியின் சமுதாயத்தின் முடிவாக அமைந்ததோ அந்த நபி உயிருடன் இருக்கின்றார் என இவர்கள் கூறுகின்றனர். அதாவது பனீ இஸ்ராயீல் மக்களுக்கு இழிவும், தோல்வியும் ஏற்பட்டது. அவர்களின் நபியினை உயிருள்ளவர் என்று கூறப்படுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 28–29; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் வந்த எந்த நபியும் இனி வர முடியாது. ஈஸாவும் வர முடியாது. ஏனென்றால் அவர் ஹஸ்ரத் மூஸாவின் சமுதாயத்தைச் சார்ந்தவர். அவர் மரணித்து விட்டார்.

ஹஸ்ரத் மூஸாவின் சமுதாயத்தைச் சார்ந்த எந்த நபியும் இனி வர முடியாது என்ற விஷயத்தை எடுத்துரைத்த பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: இனி நபித்துவ அருள் என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாகவும் அன்னாரைப் பின்பற்றி நடப்பதன் மூலமாகவும் மட்டுமே தொடர முடியும். ஏனென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்தான் உயிருள்ள நபி ஆவார்கள். ஆக, அந்த அடிப்படையில் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் விளைவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் அனுப்பியுள்ளான். அவரின் அந்தஸ்து என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழி நடக்கும் நபி மற்றும் ஷரீஅத்தைப் பெறாத நபி என்பதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் மற்றும் தூதர்களுக்கு வழங்கப்பட்ட அந்த அருட்கொடையிலிருந்து எனது எந்தவொரு திறமையினாலும் அல்லாமல், அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே முழுமையான பங்கினை நான் பெற்றுள்ளேன். எனது தலைவரும், எஜமானரும், நபிமார்களில் சிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழிகளை நான் பின்தொடராமல் இருந்திருந்தால் என்னால் ஒருபோதும் அந்த அருளைப் பெற்றிருக்க முடியாது. எனவே நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் மூலம் மட்டுமே அனைத்தையும் பெற்றேன். அந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் எந்தவொரு மனிதனும் இறைவனை அடையவும் முடியாது. முழுமையான இறை ஞானத்தின் பங்கினை எவராலும் பெறவும் முடியாது. இதனை முழுமையான அறிவால் நான் அறிவேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையாகவும், முழுமையாகவும் பின்பற்றுதல் என்றால் என்ன? என்பதையும் நான் இங்கு கூறியிருக்கிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுதல் மூலம் மற்றெல்லாவற்றையும் விட முதலில் மனிதனுக்கு உள்ளத்தில் ஓர் உணர்வு ஏற்படுகின்றது. அது கல்பே ஸலீம் ஆகும். அதாவது உள்ளத்திலிருந்து உலக நேசம் வெளியேறி விடுகின்றது. அதன் பிறகு தூய மற்றும் முழுமையான இறை நேசம் அந்த கல்பே ஸலீம் கிடைப்பதன் மூலம் அருளப்படுகின்றது. அதாவது உலக நேசம் வெளியேறிய பிறகு இறை நேசம் மனிதனுக்கு கிடைக்கின்றது. இந்த அனைத்து அருட்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் மூலம் அவருக்கு வாரிசுரிமையாகக் கிடைக்கின்றது.

இது தொடர்பாக قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ என்று அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால், வாருங்கள்! என்னைப் பின்பற்றுங்கள். அதனால் இறைவனும் உங்களை நேசிப்பான். ஆனால் ஒருதலைப்பட்சமான நேசத்திற்கான வாதம் முற்றிலும் பொய் மற்றும் வீணானதாகும். மனிதன் உண்மையான முறையில் இறைவனிடம் அன்பு கொள்ளும்போது இறைவனும் அவனை நேசிக்கின்றான். அப்போது பூமியில் அவரது புகழ் பரப்பப்படுகின்றது. ஆயிரக்கணக்கான மனித உள்ளங்களில் அவர் மீதான அன்பு ஏற்படுத்தப்படுகிறது. ஓர் ஈர்ப்பு சக்தி அவருக்கு அருளப்படுகின்றது. அவருடன் எப்போதும் நிலைபெற்றிருக்கும் ஓர் ஒளி அவருக்கு வழங்கப்படுகின்றது. இன்று பாருங்கள். தொலை தூர நாடுகளில் அமர்ந்துள்ள ஆஃப்பிரிக்க மக்களின் உள்ளங்களில் இந்த அன்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைகின்றனர். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவனிடம் அன்பு கொண்டு, முழு உலகத்தையும் விட்டு விட்டு அந்த இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் மேலும் அல்லாஹ் அல்லாதவற்றின் மகத்துவம் மற்றும் மேன்மை அவனது உள்ளத்தில் எஞ்சியிருக்காமல் போய் விடும்போது இன்னும் சொல்லப்போனால், அனைத்தையும் மரணித்த புழுவை விட கீழானதாகக் கருதும்போது, அவரது உள்ளத்தைப் பார்க்கின்ற இறைவன் ஒரு மகத்துவமிக்க வெளிப்பாட்டுடன் அவரிடம் இறங்குகின்றான். உதாரணமாக, ஒரு தூய கண்ணாடியை சூரியனுக்கு முன் வைக்கும் போது சூரியனின் உருவமும் முழுமையாக அதில் படிந்து விடுகின்றது. விண்ணிலுள்ள அந்த கதிரவன் இந்த கண்ணாடியிலும் உள்ளான் என்று அப்போது நம்மால் உவமையாகக் கூற இயலும். அதே போன்று இறைவனும் அப்படிப்பட்ட இதயங்களில் இறங்குகின்றான். அதாவது அத்தகைய நபர்களின் உள்ளத்தை தனது அரியணையாக ஆக்கிக் கொள்கின்றான். இவ்விஷயங்களுக்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 64–65)

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகவும், முழுமையாக பின்பற்றக் கூடியவராகவும் அன்னார் (அலை) அவர்கள் திகழ்ந்தார்கள். அதன் காரணமாகவே அல்லாஹ் அன்னாரை நேசித்தான். வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிய நபியாகவும் ஆக்கினான். அன்னாரை ஏற்றுக் கொண்ட பிறகு இதனை கண்ணியப்படுத்தும் நற்பேறை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றும் நற்பேறையும் அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அதாவது ஒவ்வொருவருக்கும் தத்தமது தகுதி மற்றும் ஆற்றலுக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்பட அன்னாரை பின்பற்றும் நற்பேறை வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த உண்மைப் பேரன்பரை அடையாளம் கண்டு கொள்ளும் நற்பேறையும், ஏற்றுக் கொள்ளும் நற்பேறையும் அல்லாஹ் ஏனைய முஸ்லிம்களுக்கு வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் உளவியல் நிபுணர் ஆவார்கள்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் M.A

**நபிமார்களின் மாபெரும் தனித்தன்மை**

உலகில் ஏராளமான உளவியல் நிபுணர்கள் கடந்துள்ளனர். மேலும் இன்றைய நாட்களில் இந்த அறிவு சிறப்பான முறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்து விட்டது. ஆனால் சீர்தூக்கிப் பாத்தால் இந்த விஷயம் தெரிய வரும். உளவியல் நிபுணர் என்று கூறப்படக்கூடிய பெரும்பாலான மக்களின் கல்வி என்பது வெறும் மரபு சொற்களை அறிந்து கொள்ளும் அளவில் மட்டுமே இருந்துள்ளது. மரபு சொற்களின் அறிவு என்பதைக் கடந்து எப்போதாவது ஒருவர் உண்மையான அறிவை அடைகின்றார் என்றால் அதுவும் கூட இந்த கலையின் கல்விப் பகுதியின் அளவிலேயே நின்று விடுகின்றது. ஆனால் உண்மையில் இதன் நோக்கமான செயல் பகுதியை பெறுவதிலிருந்து இந்தக் கலையின் பெரும்பாலான நிபுணர்கள் இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றார்கள். உளவியல் நிபுணத்துவம் மட்டுமல்ல. உலகின் ஏராளமான கல்விகள் இதே விரக்தியின் நிலையிலேயே காணப்படுகின்றன. மக்கள் அடைந்த அறிவு மரபு சொற்களைத் தாண்டி செல்லவில்லை. அவர்கள் எந்த வடிவில் முன்னேறிச் செல்கின்றார்களோ அதுவும் வெறும் அறிவான அம்சத்துடன் நின்று விடுகின்றது. மேலும் அறிவின் பயன்பாட்டை செயல் ரீதியான நிலையில் மிகக் குறைவான மக்களே அடைகின்றார்கள்.

தர்க்க கல்வியை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான நிபுணர்கள் தென்படுகிறார்கள். ஆனால் அவர்களின் அறிவும் மரபு சொற்களைத் தாண்டிச் செல்வதில்லை. அவர்களின் நீண்ட ஆயுள் மரபுச் செற்களை மனனம் செய்வதிலேயே கழிந்து விடுகிறது. அந்த கல்வியின் உண்மையான நோக்கம் என்னவென்றால், தர்க்கத்தின் சரியான திறமையை உருவாக்குவதாகும். (ஆனால்) அதிலிருந்து பெரும்பாலான மக்கள் இழப்பிற்குரியவர்களாகவே இருக்கின்றார்கள். இன்னும் கூறப்போனால் சில நேரம் தர்க்கவாதிகள் தனது ஆதாரங்களில் மேலோட்டமானவர்களாகவும் பலவீனமான வாதங்களை முன் வைப்பவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஏனென்றால், மரபு சொற்களில் மூழ்கியிருப்பது அவர்களுக்கு உண்மையை அடைகின்ற வழிகளில் தடையாக ஆகிவிடுகின்றது. ஆனால் பொதுமக்களுக்கு எதிரில் நபிமார்களின் நிலையை நாம் ஆய்வு செய்து பார்த்தால் இந்தத் தனித்தன்மை மிக வெளிப்படையாக தென்படுகின்றது. அவர்களின் வாக்கியங்கள் உண்மையான அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இன்னும் கூறப்போனால், அவர்கள் சில நேரத்தில் அறிவின் சொற்றொடர்களை வெளிப்படையான கல்வியின் குறைபாட்டின் காரணமாக அறியாமல் இருக்கின்றார்கள். ஆயினும் அவர்களின் வட்டத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு அறிவையும் மேலும் அதன் நோக்கத்தையும் முழுமையாக அறிந்திருக்கின்றார்கள். அதில் அவர்களை விட வேறு எந்த நபரும் அதுபோன்ற அறிவின் அறிஞராக கிடைக்க முடியாது.

**நபிமார்களும் உளவியல் நிபுணத்துவமும்**

உளவியல் அறிவு என்பது மனிதனின் மூளை மற்றும் இதயத்தில் ஏற்படும் தாக்கங்களின் அறிவாகும். நபிமார்களின் சிறப்பான அறிவின் பகுதியாகும். ஏனென்றால் தர்பிய்யத் மற்றும் சீர்திருத்தப் பணியில் இந்த துறைக்கு சிறப்பான தொடர்பு உள்ளது. இன்னும் கூறப்போனால், உண்மை இதுவாகும். அதாவது ஷரீஅத்தின் தாக்கம் கூட பெரும்பாலும் இந்த அறிவின் அடிப்படையில் நிலைபெறுகின்றது. ஆனால் திருக்குர்ஆன் நமக்கு கூறுவது போன்றும், சூழ்நிலையிலிருந்து வெளிப்படுவது போன்றும் நபிமார்களுக்கும் படித்தரங்கள் உள்ளன. என்னென்ன பணிகள் நபியிடம் ஒப்படைக்க வேண்டியிருந்ததோ அதற்கேற்ப இறைவன் புறமிருந்து அவருக்கு நற்பேறு வழங்கப்படுகின்றது. அறிவின் வாசல்கள் திறக்கப்படுகின்றன.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் உளவியல் அறிவு**

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருந்தார்கள். முந்தைய நபிமார்களின் நிலைக்கு எதிராக முழு உலக சீர்திருத்தத்திற்காகவும் அன்னார் தோன்றி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி ஒவ்வொரு கருப்பர் மற்றும் ஒவ்வொரு வெள்ளையரின் பெயரிலும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீஅத் அனைத்து சமுதாயத்திற்கும், அனைத்து காலகட்டத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே இயற்கையாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அந்த ஆற்றல்கள் இயல்பிலேயே வைக்கப்பட்டிருந்தன. இந்த மகத்துவமிக்க பணியை செய்து முடிப்பதற்கு அவசியமான ஞானங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதில் எந்தவொரு நபியின் அவமரியாதையும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவு ஏனைய நபிமார்களுக்கு வழங்கப்படவில்லை. வேறு எவரும் இந்த ஆற்றல்களை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துக் கொண்டு சென்ற ஆற்றல்களுடன் செல்லவில்லை. எனவே தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

اَنَا سَيِّدُ وَلَدِ اٰدَمَ وَلَا فَخْرَ நான் ஆதமின் சந்ததிகளின் தலைவன் ஆவேன். ஆனால் இதன் காரணமாக நான் எனது நஃப்ஸில் எந்த ஆணவத்தையும் காணவில்லலை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இறைத்தூதர்களில் சிறந்தவர்களாக இருந்தார்கள். எனவே உளவியல் அறிவிலும் அன்னார் சிறந்தவராக இருக்க வேண்டியதிருந்தது. அதை அறிவது நபித்துவத்தின் கடமைகளை ஆற்றுவதுடன் பிண்ணிப் பிணைந்ததாக இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட முதலிலும் எல்லாரையும் விட முன்னிலையிலும் இருக்க வேண்டியதிருந்தது. மேலும் நாம் பார்க்கின்றோம். உண்மையும் அவ்வாறே இருந்தது. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத் மற்றும் சீர்திருத்தத்தின் மகத்துவமிக்க மற்றும் தன்னிகரற்ற பணிகளை வாங்க இருந்தான். எனவே ஒரு நல்ல பஞ்சின் துண்டை தண்ணீரில் நனைத்து வெளியே எடுக்கும்போது அது தண்ணீரால் முழுமையாக நனைந்து விடுவதைப் போன்று இந்த அறிவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பில் ஊடுருவி இருந்தது. ஓர் இயற்கையான நீரூற்றாக இந்த அறிவின் நிரந்தரமான உண்மைத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து முழுமையாக பெருக்கெடுத்தது.

என்னைப் பொறுத்தவரை இந்த சுருக்கமான கட்டுரையில் இந்தத் தலைப்பின் அனைத்து அம்சங்களையும் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு இல்லை. இன்னும் கூறப்போனால் எந்தவொரு அம்சத்தையும் கூட விளக்கமாக எடுத்துரைக்க முடியாது. எனவே இந்த இடத்தில் மிகவும் சுருக்கமாக சில உதாரணங்களை மட்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகளிலிருந்து எடுத்துரைக்கின்றேன். அதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உளவியல் அறிவில் எந்த அளவுக்கு சிறந்து விளங்கினார்கள் என்பது தெரிய வரும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு கூற்றும் உளவியல் அறிவின் நிரந்தரமான விதிமுறையின் கீழ் செயல்பட்டதும் தெரிய வரும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகளிலிருந்து மிகவும் சுருக்கமாக அன்னார் அன்றாடம் உரையாடிய சில கூற்றுகளை மட்டுமே நான் எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உரையாடலின் சிறப்பு**

நான் ஏற்கனவே கூறி விட்டேன். பொது வழக்கில் உளவியல் அறிவு என்பது மனித மூளையின் விளக்கம் ஆகும். மேலும் அதன்

பணிகளுடன் தொடர்புடைய அறிவாகும். இந்த அறிவில் மூளை மற்றும் இதயத்தின் தாக்கங்களைக் கொண்டு விவாதிக்கப்படுகின்றது. மனிதன் தனது சூழலில் எவ்வாறு தாக்கத்தை பெறுகின்றான் என்பதும் கூறப்படுகின்றது. மேலும் அவனது எண்ண அலைகள் எவ்வாறு, எந்த விதிமுறைகளின்கீழ் செல்கின்றன என்ற விஷயங்களும் கூறப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உரையாடல்களில் இந்த சிறப்பு இருந்தது. அதாவது அதில் செவியேற்பவர் அல்லது எதிரே உள்ள ஜமாஅத்தின் மூளையின் தன்மை முழுமையாக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. ஒரு தனி நபர் அல்லது கூட்டத்தின் எண்ணங்களின் சீர்திருத்தத்திற்காக இது மிகச் சிறந்த வழிமுறையாக அமைகின்றது. இதற்கேற்ப அன்னாருடைய நாவும் அருளுக்குரியதாக இருந்தது.

இதுபோன்ற உதாரணங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் ஆயிரக்கணக்கில் கிடைக்கின்றன. இன்னும் கூறப்போனால் அன்னார் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையுமே இதற்கு உதாரணமாக உள்ளது. ஆயினும் நான் இந்த இடத்தில் சில உதாரணங்களை மட்டுமே எடுத்துரைப்பேன்.

**பதர் போர் சந்தர்ப்பத்தின் உதாரணம்:** பதர் போர் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் இன்னும் நிராகரிப்பாளர்களின் படையை எதிர்கொண்டிருக்கவில்லை. அப்போது நிராகரிப்பாளர்களின் ஒரு பெரும் படை மக்காவிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது என்ற செய்தியை பெரும்பாலான முஸ்லிம்கள் அறியாதவர்களாக இருந்தனர். ஒரு வணிகக் குழுவை எதிர்கொள்ள இருக்கின்றோம் என்ற எண்ணத்துடன் மட்டுமே அவர்கள் (முஸ்லிம்கள்) வீடுகளிலிருந்து புறப்பட்டிருந்தனர். அப்போது சில சஹாபிகள் மக்கத்து காஃபிர்களின் ஒரு போர் வீரரை ஒரு நீரூற்றுக்கு அருகிலிருந்து பிடித்தனர். மேலும் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு பிடித்துக் கொண்டு வந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் நிராகரிப்பாளர்களின் படையைக் குறித்து சில கேள்விகளை கேட்டார்கள். மக்கத்து தலைவர்களில் யார், யார் உடனிருக்கின்றனர்? என்றும் கேட்டார்கள். அதற்கு அவன் உத்பா, ஷேபா, உமைய்யா, நஸர் பின் ஹாரிஸ், உக்பா, அபூஜஹில், ஹகீம் பின் ஹஸாம் ஆகிய அனைவரும் உடன் உள்ளனர் என்று கூறினான். இந்த மக்கள் அனைவரும் குரைஷிய கோத்திரத்தின் பெரும் தலைவர்களாக இருந்தனர். மேலும் மிகப்பெரும் வீரர்களாகவும், போர் தளபதிகளாகவும் கருதப்பட்டனர். சில பலவீனமான சஹாபிகள் ஓரளவிற்கு பதற்றமடைந்தனர். அவர்களை நோக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) பார்த்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

هٰذِهٖ مَكَّةُ قَدْ اَلْقَتْ اِلَيْكُمْ اَفْلَاذَ كَبِدِهَا

பாருங்கள். மக்கவாசிகள் உங்களுக்கு முன்னால் தங்களது இதயத் துண்டுகளை எடுத்து வைத்து விட்டார்கள். அதாவது நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். இறைவன் உங்களுக்காக இத்தனை பெரிய எதிரிகளை ஒன்றுகூட்டி விட்டான். சஹாபிகளின் எண்ணங்களின் ஓட்டம் உடனடியாக மாறியது. இது ஒன்றும் பதற்றமடைவதற்கான சந்தர்ப்பம் அல்ல. மாறாக, இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப இந்த நிராகரிப்பாளர்களின் தலைவர்களை தமது கரங்களால் அழிப்பதற்காக இங்கு ஒன்றுகூட்டியுள்ளான். இவ்வாறு எந்த செய்தி பலவீனமான இயல்புடைய முஸ்லிம்களுக்கு சங்கடத்திற்கும், அச்சத்திற்கும் காரணியாக இருந்ததோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து திடீரென்று வெறியேறிய ஒரு கூற்று அவர்களின் மகிழ்ச்சிக்கும், உறுதிப்பாட்டிற்கும் காரணியாக ஆனது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வாக்கியத்தை ஆழ்ந்து சிந்தித்து அதன் விளைவாக கூறியிருக்கவில்லை. மாறாக, அங்கு ஒரு பக்கம் மக்கத்து போர் வீரரின் வாயிலிருந்து இந்த சொற்களைக் கேட்டார்கள். மேலும் சஹாபிகளின் முகங்களின் மீது பார்வையை செலுத்தி அவர்களிடம் பதற்றத்தின் தாக்கம் இருப்பதைக் கண்டு கொண்டார்கள். எனவே உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்து விட்டன. அதாவது எவ்வாறு ஒரு வில்லின் நாணிலிருந்து அம்பு வெளியேறுமோ அதுபோன்று இந்த சொற்கள் வெளியேறின. மேலும் இந்த விஷயத்தின் விளைவால் முஸ்லிம்களின் எண்ணங்களின் ஓட்டம் மாற்றமடைந்து உடனடியாக தனது திசையை மாற்றிக் கொண்டது.

**மக்கத்து வெற்றியின் சந்தர்ப்பத்தின் உதாரணம்**

மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்து தலைவரான அபூசுஃப்யானின் விருப்பங்களை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அவருக்கு இது பற்றி சில வாக்குறுதிகளையும் வழங்கி இருந்தார்கள். அதாவது இஸ்லாமிய படை மிகவும் கம்பீரத்துடனும், பொலிவுடனும் மக்காவை நோக்கி முன்னேறியபோது அபூசுஃப்யான் ஓர் உயரமான இடத்தில் அமர்ந்து கொண்டு இந்தக் காட்சிகளை கண்டு கொண்டிருந்தார். அப்போது தனது கோத்திரத்தின் தலைவராகவும், கொடியை ஏந்தியவராகவும் இருந்த அன்ஸாரின் தலைவர் ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்கள் அவருக்கு முன்னால் கடந்து சென்றார். அப்போது அவர் அபூசுஃப்யானை அழைத்து இன்று மக்காவாசிகளுக்கு இழிவிற்குரிய நாளாகும் என்று கூறினார். அபூசுஃப்யானின் உள்ளத்தில் இந்த விஷயம் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியது. உடனே தாங்கள் சஅது என்ன கூறினார்? என்று கேட்டீர்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர் கூறினார். இன்று மக்காவிற்கு இழிவிற்குரிய நாளாகும் என்று சஅது கூறுகின்றார் என்றும் முறையிட்டார். சஅது தவறாக கூறியுள்ளார். இன்று மக்காவின் கண்ணியத்திற்குரிய நாளாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் சஅது அவர்களிடமிருந்து தலைமைத்துவ கொடியை திரும்ப பெற்று அவரது மகனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்கள்.

இதுவும் உடனடியாக கூறப்பட்ட கூற்றாகும். ஆயினும் இதில் உளவியல் அறிவைக் கொண்ட எத்துனை நிரந்தரமான உண்மைத்துவங்கள் ஒளிந்திருக்கின்றன என்பதைப் பாருங்கள்.

முதலாவது விஷயம் என்னவென்றால், மக்காவாசிகளின் இழிவிற்குரிய நாள் என்ற வாக்கியம் இவ்வாறு புரிந்திருக்கப்பட்டிருக்கும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். எனவே இது மக்காவாசிகளின் இழிவிற்குரியதாகும் என்று பொருள்பட்டிருக்கும். ஆனால் மக்கா வெற்றி கொள்ளப்படும்போது அதுவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வந்து கொண்டிருக்கும்போது பின்னர் நிச்சயமாக அது கண்ணியத்திற்குரியதாக அமையும். அதுமட்டுமல்ல, மக்கா நகரம் எப்படிப்பட்ட இடம் என்றால் அதனை எந்தவொரு நிலையிலும் இழிவுடன் தொடர்புபடுத்த முடியாது.

இரண்டாவதாக, சஅது அவர்களின் கூற்றிலிருந்தும் அந்தக் கூற்றின் தொனியிலிருந்தும் முஸ்லிம்களின் உள்ளங்களில் அபூசுஃப்யானைக் குறித்து ஏளனத்திற்குரிய உணர்வுகள் உருவாகி இருக்கக்கூடும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை ஊக்கப்படுத்தவே விரும்பி இருந்தார்கள். எனவே அபூசுஃப்யானின் உடனடியான புகார் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅது அவர்களை எச்சரித்தார்கள். மேலும் முஸ்லிம்களின் எண்ணங்களை தவறான பாதையில் செல்வதிலிருந்து தடுத்து நிறுத்தினார்கள். மூன்றாவதாக, சஅது அவர்களின் வாயிலிருந்து இந்தக் கூற்று திடீரென வெளியேறியது என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டிருந்தார்கள். அது வேண்டுமென்றே கூறிய கூற்றாக இருக்கவில்லை. எனவே சஅது தனது கோத்திரத்தின் தலைவராக இருந்தார். இயன்றவரை அவருக்கும் எந்த அவமரியாதையும் ஏற்படக்கூடாது என்பதை சிந்தித்தவாறு அவரது கரங்களிலிருந்த தலைமைத்துவ கொடி திரும்பப் பெறப்பட்டது. ஆயினும் அந்தக் கொடி அவரிடமிருந்து பெறப்பட்டு அவருடைய மகனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அன்னார் கட்டளையும் வழங்கினார்கள். ஏனென்றால் சஅது அவர்களின் உள்ளமும் ஊக்கம் பெற வேண்டும். அதே நேரம் எவருக்கும் அவரை குத்திக்காட்ட சந்தர்ப்பமும் கிடைத்து

விடக்கூடாது. சிந்தித்துப் பாருங்கள். இந்த சுருக்கமான சொற்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்டவை ஆகும். அன்னார் (ஸல்) அவர்களின் பார்வை எங்கெல்லாம் சென்றடைந்திருந்தது. ஒரு வகையில் ஒரு நொடிப்பொழுதில் ஏராளமான பாதிப்பை ஏற்படுத்த இருந்த எண்ணத்தின் வாசல்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொற்கள் அடைத்து விட்டன. மேலும் நன்மை அளிக்கக்கூடிய எண்ணங்களின் பல வாசல்களை அது திறந்து விட்டது.

**ஹுனைன் போர் சந்தர்ப்பத்தின் உதாரணம்**

ஹுனைன் போருக்குப் பிறகு போர் செல்வங்கள் பங்கிடப்படுவதற்கான கேள்வி எழுந்தது. அப்போது மக்காவாசிகளின் உள்ளங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அதிகம் வழங்கினார்கள். சில ஆவேசமான மற்றும் குறைமதி கொண்ட அன்ஸார் அது குறித்து முறையீடு செய்தனர். எங்களது வாளிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது. ஆனால் பரிசை மக்காவாசிகள் பெற்றுக் கொண்டு விட்டனர் என்று அவர்கள் கூறினர். இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் அன்ஸார் சகோதரர்களை ஒரு தனி இடத்தில் ஒன்றுகூட்டினார்கள். எனக்கு இதுபோன்றெல்லாம் செய்திகள் வந்துள்ளன என்று கூறினார்கள்.

மேலும் மக்கள் ஆடுகளை, ஒட்டகங்களை பெற்றுக் கொண்டு செல்கின்றனர். ஆனால் உங்களுடன் இறைவனின் தூதர் சென்று கொண்டிருக்கின்றார். இதில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லையா? என்று கேட்டார்கள். அன்ஸார் சகோதரர்கள் தங்களது கட்டுப்பாட்டை இழந்து அழத் தொடங்கினார்கள். அவர்கள் அழுதழுது தொண்டை அடைத்து விட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களில் சில அறிவீனமான சில இளைஞர்களின் வாயிலிருந்து இந்த சொற்கள் வந்து விட்டன. நாங்கள் இறைவனின் தூதரை பெற்றுக் கொள்கின்றோம். உலக செல்வங்களின் மீது எங்களுக்கு விருப்பம் இல்லை என்று அவர்கள் கூறினர். அன்ஸார் கூட்டத்தினரே! இனி நீங்கள் என்னை சுவர்க்கத்தில் கவ்ஸர் தடாகத்தில் சந்தியுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உளவியல் அறிவின் அடிப்படையில் இந்த சம்பவத்தின் முதல் பகுதியின் விளக்கம் தெளிவானதாகும். எந்த குறிப்புக்கும் அவசியமில்லை. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி வாக்கியத்திற்கு சில விளக்கம் தேவைப்படுகிறது. இது ஒரு எளிய, தெளிவான கூற்றாகும். ஆனால் உளவியல் அறிவின் அடிப்படையில் மிக உயர்தரமான வாக்கியமாகும். உங்களில் சிலர் உலகத்தின் மீது பேராசை கொண்டுள்ளார்கள். அதன் பாதாளத்தில் இறைவனின் இந்த வெகுமதியிலிருந்து உலகில் இழப்பிற்குரியவர்களாக இருப்பீர்கள். இது உலக பரிசுகளில் மிகவும் உயர்தரமான பரிசாகும் என்பதே அன்னார் (ஸல்) அவர்களின் கூற்றின் பொருளாக இருந்தது. அதாவது அரசாங்கமும், ஆட்சியும். எனினும் உங்களின் கலப்பற்றத் தன்மையும், உங்களின் தியாகங்களும் வீண்போய் விட்டன என்று கருதாதீர்கள். மாறாக, அதனைப் பெறுவதற்கு நீங்கள் என்னை மறுமையில் கவ்ஸர் தடாகத்தில் வந்து சந்தியுங்கள். அங்கு மறுமையின் அருட்கொடைகளால் நீங்கள் நிரப்பப்படுவீர்கள். மேலும் இறைவன் உங்களது அனைத்து குறைகளையும் நீக்கி விடுவான். ஆனால் உலகின் ஆட்சி, அதிகாரம் எனும் பரிசு இப்போது உங்களுக்கு கிடைக்காது என்பதும் அன்னாரின் கூற்றின் பொருளாக இருந்தது.

ஆக ஒரு வகையில் இந்த சிறிய வாக்கியத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரின் உள்ளங்களில் இந்த படிப்பினையை உறுதியாக பதியச் செய்து விட்டார்கள். அதாவது சமுதாய ரீதியில் நீங்கள் உறுதியாக விரும்பினால், முன்னேற்றம் பெற விரும்பினால் பின்னர் நீங்கள் உங்களது பலவீனான தோழர்களையும் உங்களுடன் கவனத்தில் கொண்டு அழைத்துச் செல்லுங்கள். இல்லையென்றால் ஒரு பகுதியின் தாக்கம் மற்றொரு பகுதியின் மீதும் வீழ்ந்து விடும். மேலும் இந்த ஒரே வாக்கியத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் இதனையும் கூறி விட்டார்கள். நீங்கள் எனது கரங்களைப் பிடித்துக் கொண்டு உலகத்தின் பரிசுகளில் போராசை கொண்டீர்கள் என்றால் இனி நீங்கள் உலக பரிசுகளை இழக்க வேண்டும். ஆனால் எண்ணங்களின் ஒட்டங்களில் இந்த எண்ணம் உடனடியாக தோன்றி விடக்கூடும். அதாவது அன்ஸார் கூட்டம் இறை அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியதாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த எண்ணத்தையும் அகற்றி விட்டார்கள். மாறாக, மறுமையில் இறைவன் அருட்கொடைகளுக்கு அவர்களை வாரிசாக்கி விடுவான்.

அசல் வாழ்க்கை என்பது மறுமை வாழ்க்கையே ஆகும். எனவே மறுமையில் அருட்கொடைகள் கிடைத்து விடும் என்றால் உலகில் ஏற்படும் இழப்புகள் எந்த வகையிலும் பொருட்படுத்தத் தக்கதல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் இனிமை மேலும் கூறுகின்றது. ஒரு வகையில் அந்த சந்தர்ப்பத்தில் அன்ஸாரை எச்சரிக்க வேண்டும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அசல் எண்ணமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பரிசுத் தொடர்பான பகுதியை மிகவும் விளக்கமாக தெளிவான சொற்களில் எடுத்துரைத்து விட்டார்கள். ஆனால் தண்டனை மற்றும் இழப்பிற்கான பொருளைக் கொண்ட சொற்களை அன்னார் எடுத்துரைக்கவில்லை. மாறாக, அதனை திரைமறைவில் வைத்து விட்டார்கள். அதாவது இனி உங்களுக்கு உலகில் ஆட்சி என்ற பரிசு கிடைக்காது என்று அன்னார் கூறவில்லை. மாறாக, நல்லது! இனி நீங்கள் என்னை மறுமையில் சந்தியுங்கள் என்று மட்டும் கூறி விட்டு மௌனமாகி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை மிகவும் தெளிவுபட எடுத்துரைத்து விட்டார்கள். மறுமையில் இறைவனின் அருட்கொடைகளில் பெரும் பகுதியை நீங்கள் பெறுவீர்கள் என்று கூறினார்கள். என்னை நீங்கள் கவ்ஸர் தடாகத்தில் சந்தியுங்கள் என்று மட்டும் கூறுவதை போதுமானதாக கருதினார்கள். அதாவது அந்த கவ்ஸர் தடாகத்தில் எனக்கு அருகில் வாருங்கள். அங்கு எல்லா பரிசுகளும், எல்லா சிறப்புளும் தனது உச்சத்தை அடைந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள். உலகத்தில் ஏற்பட்ட இழப்பை மறுமையின் பரிசுகளின் மிகுதியால் பெற்றுக் கொள்வீர்கள் என்பது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

**மற்றொரு உதாரணம்:** இறைவனின் எண்ணத்திற்கேற்ப ஒரு போரில் முஸ்லிம்களுக்கு பின்னடைவு ஏற்பட்டிருந்தது. பல சஹாபிகள் போர் மைதானத்தை விட்டு ஓடி விட்டார்கள். பிற்காலத்தில் இந்த மக்கள் வெட்கத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வராமல் இருந்தார்கள். பள்ளிவாசலின் மூலையில் முகத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் இருளில் அமர்ந்திருப்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டபோது நீங்கள் யார்? என்று அவர்களிடம் கேட்டார்கள். அவர்கள் வெட்கத்தால் தலைகுனிந்து நின்றார்கள். அவர்கள் அழுது கொண்டு يَا رَسُوْلَ اللّٰهِ نَحْنُ الْفَرَّارُوْنَ என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் போர் மைதானத்தை விட்டு தப்பி ஓடியவர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக بَلْ اَنْتُمُ الْعَكَّارُوْنَ என்று கூறினார்கள். இல்லை; இல்லை. நீங்கள் தப்பி ஓடியவர்கள் அல்ல. நீங்கள் மீண்டும் தாக்குதலுக்காக தயாராக இருங்கள் என்று கூறினார்கள். அல்லாஹ்! அல்லாஹ்! எவ்வளவு அருமையான கூற்று. போர் மைதானத்திலிருந்து ஓடிய போர் வீரர்கள் வெட்கத்தால் நிலைகுலைந்து இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் உங்களிடம் எங்களது முகத்தை எப்படி காட்ட முடியும்? நாங்களோ மைதானத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடிவிட்டோம் என்று அவர்கள் எண்ணினர். அவர்கள் தைரியம் இழந்து விட்டார்கள் என்பதை அன்னார் (ஸல) அவர்கள் கண்டார்கள். எனவே நீங்கள் தப்பி ஓடியவர்கள் அல்ல. நீங்கள் மீண்டும் தாக்குதல் தொடுப்பதற்காக பின்வாங்கி வந்துள்ளீர்கள். என்னுடன் இணைந்து மீண்டும் போருக்கு புறப்படுங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஒரு சொல்லில் தைரியம் இழந்து நின்ற போர் வீரனின் தைரியம் அவனை தைரியத்தின் உச்சத்திற்கே அழைத்துச் சென்றது. (பஷீர் கட்டுரைகள், பக்கம் 159–165)

## ஏகத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் போதனை

மவ்லானா முனீர் அஹ்மத் காதிம், அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் – தென் இந்தியா

ஏகத்துவத்தின் உண்மையான அறிவு அதுவும் ஏகத்துவத்தின் உச்சத்தை அடைய வைக்கக்கூடிய அறிவு உலகில் முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக வெளிப்பட்டது. முதல் முறையாக வாஹித் தொடர்பாக அஹத் என்ற பண்பின் மூலமாகவும் உலகம் அறிந்து கொண்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரத்துல் இக்லாஸின் மொழியாக்கத்தின் அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

قُلْ என்ற சொல் கடைசி மூன்று சூராக்களுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ளது. அதில் எமது இந்தத் தூதுச் செய்தியை மற்ற மக்களுக்கு தெரியப்படுத்தவும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனுடைய தூதுச் செய்தியை மக்கள் வரை கொண்டு போய் சேர்க்கும்போது மற்ற மக்களும் இந்த قُلْ என்ற சொல்லை படிப்பார்கள். ஆகையால் அவர்கள் மீதும் கடமையாகி விடும். அதாவது இந்த கூற்றை மேலும் மக்கள் வரை கொண்டு போய் சேர்க்க வேண்டும். ஆகையால் قُلْ என்று கூறி, எம்முடைய போதனையை உங்களுடைய வட்டத்திற்குள் மட்டுமே வைத்து விடாமல் மற்ற மக்கள் வரை எட்ட வைக்க வேண்டும் என்று கவனமூட்டப்பட்டுள்ளது. மேலும் உங்களிடமிருந்து கேட்கக்கூடிய மக்கள் அவர்களுக்கு முன்பு இருப்பவர்களிடம் இதை கூறுவார்கள். மேலும் பிறகு அவர்கள் அவர்களுக்கு முன்பு இருப்பவர்களிடம் இதை கூறுவார்கள். மேலும் பிறகு அவர்கள் அவர்களுக்கு முன்பு உள்ளவர்கள் வரை இதைக் கொண்டு போய் சேர்ப்பார்கள். எந்த அளவுக்கென்றால் இது இவ்வாறு நடைபெற்றவாறு முழு உலகிலும் இறைவனுடைய தூதுச் செய்தி எட்டி விடும். ஆகையால் தான் நாம் இதனுடைய மொழியாக்கத்தை இவ்வாறு செய்து உள்ளோம். (நாம் ஒவ்வொரு காலத்து முஸ்லிம்களுக்கும் கட்டளை இடுகிறோம். அதாவது) நீங்கள் (இதை மற்றவர்களுக்கு) கூறிக் கொண்டே இருங்கள்.

முஃப்ரதத்திற்கு அரபி மொழியில் இரண்டு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாஹித் மற்றும் அஹது. வாஹித் என்பதன் அர்த்தம் ஒன்று ஆகும். ஆனால் அதைக்கூறும்போது கேட்கக்கூடியவர் புரிந்து கொள்கிறார். ஒன்றுக்கு பிறகு இரண்டு உள்ளது. இரண்டிற்குப் பிறகு மூன்று உள்ளது. மேலும மூன்றுக்குப் பிறகு நான்கு உள்ளது. ஆகையால் இந்த சொல் ஒன்று என்ற அர்தத்தைத் தருகிறது. ஆனால் அதற்குப் பிறகு எண்ணிக்கை உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகளை மறுப்பதிற்கில்லை. இதற்கு எதிராக அஹது என்பதன் அர்த்தம் ஏகன் ஆகும். மேலும் ஏகனுக்கு பிறகு இருகன் என்று யாரும் கூற மாட்டார். ஆகையால் இந்த சொல்லின் அர்த்தம் என்னவென்றால், அந்த இருப்புடன் வேறு ஓர் இருப்பிற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லை. இந்த சூராவில் அல்லாஹ்வை அஹது என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது அவனுடைய முழுமையான ஏகத்துவம் பேசப்பட்டுள்ளது. அல்லாஹ் தன்னுடைய இருப்பில் தனித்தவன் ஆவான் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும் அவனைப் போன்று வேறு ஒருவன் இருக்கின்றான் என்ற சிந்தனை கூட உருவாகாது. ஆகையால் இந்த சூராவில் இந்த சொல்லை வைத்து அல்லாஹ் தன்னுடைய முழுமையான ஏகத்துவத்தின் அறிவிப்பை செய்துள்ளான்.

அரபி சொல்லில் இந்த இடத்தில் சமது என்று உள்ளது. மேலும் சமது என்பதன் பொருள் தேவையற்றவன் என்பதாகும். அதாவது எவருடைய உதவியும் அவனுக்குத் தேவையில்லை. மாறாக எவருமே அவனுடைய தேவையில் இருந்து விடுபடவில்லை. அதாவது எந்த ஒரு இருப்புமே அவனுடைய உதவி இல்லாமல் இருக்க முடியாது. ஆகையால் இந்த சொல்லும் முழுமையான ஏகத்துவத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் அனைத்து இருப்புமே அவனுடைய உதவி இல்லாமல் வாழ முடியாது. மேலும் அவனுக்கு அவற்றின் இருப்பின் தேவையுமில்லை. சமது என்பதற்கு எப்பொழுதும் நிலை நிற்பதற்கும் சொல்லப்படுகின்றது. மிகவும் உயரிய மகிமை கொண்டவன் என்றும் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு அர்த்தங்களும் முழுமையான ஏகத்துவத்தை குறித்து கூறக்கூடியதாக இருக்கின்றது. அது எப்போதும் நிலை நிற்கக்கூடிய ஒர இருப்பு. அதனுடன் வேறு எதுவுமே போட்டியிட முடியாது என்பதை தெளிவுபடுத்துகின்றது. மேலும் அது உயர்வில் மிக அதிகமாக உயர்ந்து இருக்கின்றது. வேறு எந்த பொருளுமே அங்கு வரை செல்ல முடியாது. இந்த அர்த்தமும் அவன் தனித்தவன் என்பதை கூறுகின்றது.

இந்த வசனம் முழுமையான ஏகத்துவத்தை குறிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் எவன் ஒருவர் யாரையும் பெறவில்லையோ அவன் ஒன்று மலடாக இருக்க வேண்டும். அல்லது எவ்வாறான இருப்பாக இருக்குமென்றால் உதாரணமாக மலைகள் மற்றும் நதிகளை போன்று மாற்றங்கள் உருவாகாத ஒன்றாக இருக்கும். ஆனால் அல்லாஹ் தொடர்பாக அவன் ரஃபி ஆவான் (அதாவது அவன் மகத்துவத்தில் மிக உயர்ந்தவன் ஆவான்) என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் மலைகள் மற்றும் நதிகள் அவனுடன் ஒப்பிடக்கூடிய ஒரு பொருளல்ல. மேலும் அவன் பெறப்படவும் இல்லை. இந்த சொல்லும் முழுமையான ஏகத்துவத்தை குறிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் அல்லாஹ்வைத் தவிர மற்றவர் பெற்றெடுக்காத எந்த பொருளுமே உலகத்தில் நம்மால் பார்க்க முடியவில்லை. அது வணக்கத்திற்கு உரியதாக அழைக்கப்பட்டாலும் அல்லது அவ்வாறு இல்லை என்றாலும் சரியே!

முதலில் ஏகத்துவத்தின் இயற்தன்மை பற்றி கூறினேன். இப்பொழுது ஏகத்துவ பண்புகளைப் பற்றி சொல்கிறேன். பண்புகளில் பங்கு பெறுவதால் அதற்கு இணையான எந்த ஒரு அசைவும் மனிதனிடமிருந்து வெளிப்படாது என்பது அர்த்தமில்லை என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். மனிதன் பஸீர் மற்றம் ஸமீஃ ஆவான். மேலும் அல்லாஹ்வும் பஸீர் மற்றும் ஸமீஃ ஆவான். ஆகையால் வெளிப்படையாக இது இணையாக தென்படுகின்றது. ஆனால் அல்லாஹ் பஸீர் ஆவான். ஆனால் கண்களால் பார்ப்பத்தில்லை. மேலும் இறைவன் ஸமீஃ ஆவான். ஆனால் காதுகளால் கேட்பது இல்லை. அவன் தன்னுடைய இருப்பின் அடிப்படையில் புலன்கள் இல்லாமல் பார்க்கக் கூடியவன் ஆவான். புலன்கள் இல்லாமல் கேட்கக்கூடியவன் ஆவான். மனிதனும் பஸீர் மற்றும் ஸமீஃ ஆவான். எனினும் அவனுடைய பண்புகளில் இணையாக ஆக முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பு ஏகத்துவம் தொடர்பான சிந்தனைகள் குறிப்பிட்ட காலம் வரை மற்றும் குறிப்பிட்ட இடத்தின் வட்டத்திற்குள் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள இறைவனுடைய வேதத்தில் அல்லாஹ்வை ரப்புல் ஆலமீன் அதாவது அனைத்து உலகங்களுக்கும் ரப் (இறைவன்) ஆவான் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும் இதற்கு ஏற்றவாறு அவனுடைய அனைத்து பண்புகளின் வெளிப்பாடு காலம் மற்றும் இடத்தின் வட்டத்திற்குள் வருவதிலிருந்து உயர்வானதாக ஆக்கப்பட்டுள்ளது.

உண்மையான ஏகத்துவம் குறித்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் காண்பித்த ஏகத்துவத்தின் மகிமை மற்றும் மகத்துவம் தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் மேற்கொள்ள வேண்டுமென இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் (உண்மையான ஏகத்துவம்) மற்றும் எதனை மேற்கொள்வது உண்மையான இரட்சிப்புடன் தொடர்புடையதாக உள்ளதோ அந்த உண்மையான ஏகத்துவம் என்பது என்னவென்றால், இறைவனை எவ்வித இணையுமற்றவனாக கருத வேண்டும்.

அதாவது சிலை, மனிதன், சூரியன், சந்திரன் அல்லது தனது நஃப்ஸ், தனது திட்டங்கள், தந்திரங்கள், வஞ்சகங்கள் ஆகிய எதுவும் அவனுக்கு இணையாகாது என நம்ப வேண்டும். மேலும் அவனுக்கெதிரில் எவரையும் ஆற்றல் படைத்தவராகவும், உணவளிப்பவராகவும், கண்ணியமளிப்பவராகவும், இழிவுபடுத்தக் கூடியவராகவும், உதவி ஒத்தாசை செய்பவராகவும் ஆக்கக் கூடாது.

இரண்டாவது என்னவென்றால், தனது அன்பு, வணக்கம், மன்றாடுதல், எதிர்பார்ப்புகள் மற்றும் அச்சம் போன்ற அனைத்து விஷயங்களிலும் இறைவனையே குறிக்கோளாக கொள்ள வேண்டும். தவ்ஹீது பற்றிய எந்தவொரு கோட்பாடும் இந்த மூன்று சிறப்பு அம்சங்களின்றி முழுமையானதாக இருக்க முடியாது.

முதலாவது, இறை இருப்பின் அடிப்படையிலான தவ்ஹீது. அவனது இருப்பிற்கு எதிரில் மற்றெல்லாவற்றையும் ஒன்றுமற்றவையாகவும், உயிரற்றவையாகவும், எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாதவைகள் என்றும் கருத வேண்டும். இரண்டாவது இறைப் பண்புகளின் அடிப்படையிலான தவ்ஹீத் ஆகும். அதாவது இறைவனைத் தவிர வேறெவருக்கும் படைத்து பரிபாலித்தல் மற்றும் உலூஹிய்யத் பண்புகள் இல்லை என்றும், மனித இனத்தை பராமரிப்பவர்கள் மற்றும் பயன் அளிப்பவர்கள் அவனது திட்டத்தின் ஓர் அங்கம் ஆவர் என்றும் நம்ப வேண்டும். மூன்றாவது, அன்பு, உண்மை மற்றும் கலப்பற்றத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாக் கொண்ட தவ்ஹீது. அதாவது இறைவன் மீதான அன்பு மற்றும் கலப்பற்றத்தன்மையில் வேறெவரையும் இணையாக்கமால் இருப்பதும், அவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்வதும் ஆகும்.

(சிராஜுதீன் ஈஸாயீயின் நான்கு கேள்விகளுக்கு பதில், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 349)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையான ஏகத்துவத்தை நான் அந்த நபியின் மூலமாகவே பெற்றோம். மேலும் உயிருள்ள இறைவனை நாம் இந்த முழுமையான நபியின் மூலமாக அறிந்து கொண்டோம். மேலும் அவரின் ஒளியின் மூலமாக கிடைத்தது. மேலும் இறைவனுடன் பேசுதல் மேலும் அவனை காணுதல் எனும் பாக்கியம் மூலம் நாம் அவனுடைய முகத்தை காண்கின்றோம். இதுவும் அந்த கண்ணியமிக்க நபியின் மூலமாக நமக்கு கிடைத்தது. அந்த நேர்வழியின் சூரியனுடைய கதிர்கள் வெளிச்சத்தை போன்று நம்மீது படுகின்றன. மேலும் நாம் அதற்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் வரை அந்த ஒளியை நாம் பெற்றுக் கொண்டே இருப்போம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் நாம் இறை அருளை மறுப்பவர்களாக ஆகி விடுவோம்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 119)

பிறகு கூறுகிறார்கள்: நமது நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முஜத்திதே ஆஸம் ஆவார்கள். அவர்கள் தொலைந்து போன உண்மையை மறுபடியும் பூமியில் கொண்டு வந்தார்கள். முழு உலகையும் இருளில் பார்த்தார்கள். மேலும் அன்னாருடைய வருகையின் மூலம் இருள் ஒளியில் மாற்றப்பட்டது. எந்த சமுதாயத்தில் அன்னார் அனுப்பப்பட்டார்களோ அந்த சமுதாயம் இணைவைப்பின் ஆடையை கழற்றி விட்டு ஏகத்துவத்தின் ஆடையை அணியாத வரை அன்னார் மரணம் அடையவில்லை. இந்த பெருமையில் நம்முடைய நபி (ஸல்) அவர்களுடன் எந்த நபியுமே இணை இல்லை.

(லெக்ஸர் ஸியால்கோட், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 206)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

அனைத்து நபிமார்களை விடவும் மிக உயர்ந்தவர் அந்த நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் உலகத்தின் மாபெரும் முரப்பி அவார்கள். அதாவது அன்னாரின் மூலமாக உலகத்தின் மாபெரும் குழப்பம் சீர்திருத்தம் அடையத் தொடங்கியது. மேலும் அன்னார் காணாமற்போன ஏகத்துவம் மற்றும் தேடினாலும் கிடைக்காததை மீண்டும் பூமியில் நிலைநாட்டி விட்டார்கள்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 2 ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 97 – அடிக்குறிப்பு எண்.6)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளும் அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் இறைவணக்கத்தை நிலைநிறுத்துவதிலேயே கழிந்து விட்டது. மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் தன்னை படைத்த அந்த இறைவனுடன் எந்த அளவுக்கு நேசம் வைத்திருந்தார்கள் என்றால் அதற்கான உதாரணத்தை பூமியில் நாம் எங்குமே காண முடியவில்லை. இதற்கு சான்று பகர்ந்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى அதாவது அல்லாஹ் உம்மை தன்னுடைய நேசத்தில் முழுவதுமாக மூழ்கியதாக பார்த்தான். மேலும் பிறகு நேர்வழியை வழங்கினான். இறைவணக்கத்தின் உயரிய அந்த படித்தரம் மற்றும் இறைநேசத்தின் விளைவாக அவர்கள் மீது ஹிரா குகையில் இறை வெளிப்பாடு இறங்கியது. மேலும் அன்னார் (ஸல்) மீது இறங்கிய முதல் வஹியின் அடிப்படையில் ஏகத்துவத்தின் செய்தியாக இருந்தது.

அவன் கூறினான்: اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِیْ خَلَقَ அதாவது தங்களை படைத்த அந்த இறைவனின் பெயரால் படியுங்கள். ஆகையால் இந்த தூதுச் செய்தியை படித்தவாறும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தவாறும் அன்னார் (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்க்கையையும் கழித்தார்கள். மேலும் எல்லா நிலையிலும் தன்னை படைத்த அந்த படைப்பாளனின் மீது அர்ப்பணமாக இருந்தார்கள். ஆகையால் தான் எதிரிகளுக்கும் عَشِقَ مُحَمَّدٌ رَبَّهٗ என்று கூற வேண்டியது வந்தது. அதாவது முஹம்மது தன்னுடைய ரப்பின் மீது முழுவதுமாக நேசம் கொண்டு விட்டார். அன்னார் எப்பொழுதும் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக துஆ செய்து கொண்டிருப்பார்கள். ஆகையால் தான் அன்னார் (ஸல்) அவர்கள் பொதுவாக இந்த துஆவை செய்வார்கள்.

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ حُبَّكَ وَحُبَّ مَنْ یُّحِبُّكَ وَالْعَمَلَ الَّذِیْ یُبَلِّغُنِیْ حُبَّكَ

அல்லாஹ்வே! நான் உன்னிடம் உன்னுடைய நேசத்தை வேண்டுகிறேன். மேலும் எவர் உன்னுடன் நேசம் வைக்கிறாரோ அவருடைய நேசத்தையும் கேட்கின்றேன். உன்னுடைய அன்பை பெறக்கூடிய செயல்களை செய்வதற்கான பாக்கியத்தை உன்னிடம் கேட்கின்றேன். இஸ்லாமிய போதனைகளின் முதல் அடிப்படையே ஏகத்துவத்தை நிலைநாட்டுவது ஆகும். மேலும் அதனுடைய வடிவம் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஏகத்துவத்தின் கலிமா எந்த அளவுக்கு நேசத்திற்குரியதாக இருந்தது என்றால் அன்னார் கூறினார்கள்:

எவர் ஒருவர் தூய உள்ளத்துடன் இந்த கலிமாவை கூறுவாரோ அவர் இறைவனுடைய திருப்தியை பெறுவார். மேலும் சொர்க்கத்தின் கதவுகளை தமக்காக திறப்பதற்கான காரணியாக அமைந்து விடுவார்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

இவ்வாறே பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لَا إِلٰهَ إِلَّا اللهُ அதாவது திக்ரில் (இறை தியானத்தில்) மிகச்சிறந்த திக்ர் ஏகத்துவ கலிமாவை சொல்லிக் கொண்டு இருப்பதாகும். ஏதாவது ஒரு சோதனை ஏற்பட்டது என்றால் அப்பொழுது لَا إِلٰهَ إِلَّا اللهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ என்ற சொற்களில் ஏகத்துவத்தின் கலிமாவை உரத்த குரலில் கூறுவார்கள்.

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. அவனே வல்லவனும், சகித்துக் கொள்பவனும் ஆவான். இந்த ஏகத்துவத்தின் கலிமாவிற்காக அன்னார் எல்லா விதமான துன்பங்களையும், கஷ்டங்களையும் ஏற்றார்கள். மேலும் ஏகத்துவத்தின் கலிமா மீது தன்னுடைய உயிரை அர்ப்பணம் செய்யும் சஹாபிகளின் ஜமாஅத்தை உருவாக்கினார்கள். மேலும் அவர்கள் அதற்காக உறுதி வாய்ந்த மலை போன்று நின்றார்கள். தம்முடைய உம்மத்திற்கு நாள் முழுவதும் 100 முறை ஏகத்துவத்தின் கலிமாவை கூறுங்கள் என்று போதனை வழங்கினார்கள். அதனுடைய சொற்கள் பின்வருமாறு:

لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ
الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

முழு உலக மனிதர்களும் ஒரே கோர்வையாக நின்றவாறு தங்களுக்குள் சகோதரர்களாக வேண்டும். மேலும் இறைவனுடைய அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பமாக திகழ வேண்டும். வெறும் ஒற்றுமை ஒருமைப்பாடு என்கின்ற நூலில் கோர்க்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொருவருடைய நோக்கமும் எண்ணமும் ஒன்றாக ஆக வேண்டும் என்பது தான் இஸ்லாம் கூறும் ஏகத்துவத்தின் மாபெரும் நுட்பமான விஷயம் ஆகும். ஆகையால் கலிமா தவ்ஹீது மட்டும்தான் முழு உலகையும் ஒரு தளத்தில் ஒன்றுதிரட்டி நிறுத்த முடியும். மறுபுறம் பல தெய்வங்களை ஏற்றுக் கொள்பவர்கள் ஒருபோதும் ஒன்றாக முடியது. இந்த காரணத்தினால் தான் ஏகத்துவத்தின் கலிமாவிற்காக அன்னார் (ஸல்) அவர்கள் எல்லா விதமான தியாகங்களையும் செய்தார்கள். தங்களை விட எண்ணிக்கையில் பெரிதாக இருந்த எதிரிகளை எதிர்த்து நின்றார்கள். மேலும் தங்களுடைய இன்னுயிரை நீத்தார்கள்.

அன்னாருக்கு ஏகத்துவத்தின் கலீமாவின் மீது எந்த அளவுக்கு நேசம் இருந்தது என்றால் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு எதிரி கலிமாவை கூறிவிட்டார் என்றால் அவருடைய மன்னிப்பிற்கான அறிவிப்பை செய்தார்கள். யாராவது ஒரு தோழர் ஏகத்துவத்தின் கலிமாவை கூறிய எதிரியை கொலை செய்தார் என்றால் அவரிடம் தம்முடைய மிகப்பெரிய அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் ஒரு போரின் போது ஒரு சந்தர்ப்பத்தில் கலிமா சொன்ன எதிரியை கொன்று விட்டார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவம் சொல்லப்பட்டபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மீது தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள், அவர் வாளின் அச்சத்தின் காரணத்தினால் கலிமா கூறினார் என்றார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவர் வாளின் அச்சத்தால் தான் கலிமா கூறினார்! என்பதை அவருடைய நெஞ்சை நீங்கள் பிளந்து பார்த்தீர்களா? என்றார்கள்.

ஏகத்துவத்தின் கலிமா மீது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு தன்மானம் இருந்தது என்றால் உஹது யுத்தத்தின் போது ஒரு முறை முஸ்லிம்களுக்கு தற்காலிக தோல்வி ஏற்பட்டது. மேலும் பெருமானார் (ஸல்) மற்றும் முஸ்லிம்கள் ஒரு மலையில் அடைக்கலம் பெற்றவாறு மிகவும் அமைதியாக இருந்தார்கள். நாம் முஸ்லிம்களுடைய பெரும் பெரும் தலைவர்களை கொன்று விட்டோம் என்று எதிரிகள் நினைத்தார்கள். அப்பொழுது உங்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் (உயிருடன்) இருக்கின்றார்களா என்ன? என்று அவர்கள் உரத்த குரலில் வினவினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம் அமைதியாக இருக்குமாறு கூறினார்கள். பிறகு உங்களில் அபூபக்ர் இருக்கின்றாரா? என்று அவர்கள் வினவினர். அதற்கும் அமைதியாக இருக்குமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு அவர்கள் உரத்த குரலில் உமர் இருக்கின்றாரா? அல்லது உஸ்மான் இருக்கின்றாரா? என்று வினவினார்கள். அப்போதும் முஸ்லிம்கள் புறமிருந்து முழுவதுமான அமைதியே நிலவியது. எனவே எதிரிகள் இந்த அனைவரும் மரணித்து விட்டனர் என்று எண்ணினர்.

அப்போது அவர்கள், أُعْلُ هُبَل என்ற கோஷத்தை எழுப்பினார்கள். அதாவது எங்களுடைய ஹுபுல் சிலை வாழ்க! என்று கூறினர். இணைவைப்பு நிறைந்திருந்த இந்த கோஷத்தை கேட்டவுடன் பெருமானார் (ஸல்) அவர்களுடைய ஏகத்துவத்தின் தன்மானம் வெளிப்பட்டது. இணைவைப்பின் இந்த கோஷத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ளாமல் தாமே முஸ்லிம்களிடம் கூறினார்கள்: நீங்கள் ஏன் பதில் கூறாமல் இருக்கின்றீர்கள்? அப்பொழுது ஹுஸூர்! நாங்கள் என்ன பதில் கொடுக்க வேண்டும்? என சஹாபிகள் வினவினர்.

அதற்கு பொருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: اللهُ اعلى و اجل அல்லாஹ்வுடைய மகத்துவம் மிகவும் உயர்வானதும், பெரியதும் ஆகும்.

பத்ர் போரின் போது ஒரு நிராகரிப்பாளர் கூறினார்: எனக்கு போர் செல்வங்களிலிருந்து சிறிது வழங்கினீர்கள் என்றால் நான் உங்களுடன் இணைந்து உங்களுக்கு உதவிக்காக வருவேன். அன்னார் (ஸல்) அவர்கள், நீங்கள் முஸ்லிமாக ஆகுவதற்கு தயாரா? என்று கேட்டார்கள். அவர், நான் முஸ்லிமாக ஆகுவதற்கு தயாராக இல்லை என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் எந்த ஒரு நிராகரிப்பவரின் உதவியையும் நாடுவதில்லை என்று பதிலளித்தார்கள்.

ஏகத்துவத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்துவது குறித்தும் ஏகத்துவத்தின் முழக்கத்தை இடுவது தொடர்பாகவும் உலகம் மக்கா வெற்றியின்போது பார்த்தது. இந்த வெற்றியின் மகிழ்ச்சியில் இறைவனுடைய பெருமை மேலும் கம்பீரத்தின் வெளிப்பாடாக அன்னார் (ஸல்) அவர்களின் தலை ஒட்டகத்தின் பல்லக்கு வரை குனிந்து விட்டது. மேலும் மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் جَاءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ إِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا என்று முழக்கமிட்டார்கள்.

ஏகத்துவத்தின் இந்த நேசத்தை தம்முடைய தோழர்களிடம் உருவாக்கினார்கள். ஆகையால்தான் ஓர் அன்ஸாரி சஹாபி குபாவின் பள்ளிவாசலில் தொழ வைக்கக்கூடியவராக இருந்தார்கள். அவர்கள் தொடர்பாக அறிவிப்புகள் வருகின்றன. அவர் உரத்த சப்தமாக ஓதக்கூடிய ஒவ்வொரு தொழுகையிலும் சூரா இக்லாஸ் அதாவது قُلْ هُوَ اللهُ أَحَدٌ ஓதுவார்கள்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)



**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

இது தொடர்பாக சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அதற்கு அந்த சஹாபி கூறினார்: பெருமானார் (ஸல்) அவர்களே! இந்த சூரா இறைவனுடைய ஏகத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. ஆகையால் இது எனக்கு மிக விருப்பமானதாக இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த சூராவின் மீதான நேசம் உமக்கு சொர்க்கம் செல்வதற்கான வழியை சரிசெய்து விடும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய வாழ்நாள் முழுவதும் அல்லாஹ்வுடைய மகத்துவம் மற்றும் ஏகத்துவத்தின் போதனைகளை வழங்கிக் கொண்டே இருந்தார்கள். மேலும் தம்முடைய மரண தருவாயிலும் அன்னாருடைய அருள் நிறைந்த அந்த நாவில் இந்த சொற்கள் இருந்தன.

لَعَنَ اللهُ الْيَهُوْدَ وَالنَّصَارَى اتَّخَذُوا قُبُوْرَ أَنْبِيَائِهِمْ مَسْجِدًا

இறைவா! யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது உன்னுடைய சாபத்தை இருக்குவாயாக. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய நபிமார்களின் அடக்கஸ்தலத்தை சஜ்தா செய்யும் இடமாக ஆக்கிக் கொண்டார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தொடர்பாக இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ لَا تَجْعَلْ قَبْرِيْ وَثَنًا يُعْبَدُ அதாவது இறைவா! என்னுடைய கப்ரை வணக்கஸ்தலமாக ஆக்கி விடாதே!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை உண்மையான முறையில் பின்பற்றுவதன் மூலமாக இறை நேசத்தை பெறுவது தொடர்பாக கூறுகின்றார்கள்:

என்னுடைய சொந்த அனுபவம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றினால் மேலும் அவருடன் நேசம் வைத்தால் அதன் விளைவாக மனிதன் இறைவனின் நேசத்திற்குரியவனாக ஆக முடியும். இவ்வாறு தம்முடைய உள்ளத்தில் இறை நேசத்தின் ஓர் ஆர்வத்தை உருவாக்க முடியும். அப்பொழுதுதான் ஒரு நபர் எல்லாவிதமான பொருட்களில் இருந்தும் தம்மை விளக்கியவாறு இறைவனின் பக்கம் முழுவதுமாக குனிந்து விடுவார். மேலும் அல்லாஹ் மட்டுமே அவருடைய அன்பும், ஆர்வமும் ஆகிவிடும். அப்பொழுது இறை நேசம் ஒரு சிறப்பான முறையில் அவர் மீது வெளிப்படுகின்றது. மேலும் அவருக்கு நேசத்தின் முழு வடிவமும் மேலும் அன்பை வழங்கியவாறு ஆர்வத்தின் சக்திகளுடன் தன் புறம் இழுத்துச் செல்லும். அப்பொழுதுதான் தன்னுடைய ஆன்மாவின் ஆர்வத்தின் மீது அது வெற்றி கொள்ளும். மேலும் அதனுடைய உதவி மற்றும் ஒத்தாசை ஒவ்வொரு புறமிருந்தும் சாத்தியமில்லாத வழிகளிலிருந்து தன்னுடைய அடையாளங்களை காட்டியவாறு வெளிப்படும்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 67)

இறைவன் நம் அனைவருக்கும் ஏகத்துவதுவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக உயரிய போதனைகளின்படி உடலாலும் உள்ளத்தாலும் செயல்படுவதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.

(தமிழில்: மவ்லவி ஷஹாபுத்தீன் சாஹிப்)


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.


*(4வதுபக்கத்தின் தொடர்ச்சி...)*

தோன்றினார்களோ அந்த முழு சமுதாயமும் ஷிர்க் (இணைவைத்தல்) எனும் ஆடையைக் கலைந்து ஏகத்துவம் எனும் ஆடையை அணியாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை. அந்த மக்கள் உயர்தரமான ஈமானிய படித்தங்களை அடைந்தார்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, உண்மை, நன்றியுணர்வு மற்றும் நம்பிக்கையின் எத்தகைய பணிகள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டன என்றால் அதற்கு உதாரணம் உலகின் எந்தப் பகுதியிலும் கிடைக்க முடியாது.

இந்த அளவிற்கு வெற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர்த்து வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு மாபெரும் சான்றாகும். அன்னார் எப்படிப்பட்ட ஒரு காலத்தில் தோன்றினார்கள் மற்றும் வருகை தந்தார்கள் என்றால் அப்போதைய காலம் மிகவும் மோசமான இருளில் மூழ்கியிருந்தது. இயற்கையாகவே ஒரு மகத்துவமிக்க சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. பின்னர் அன்னார் எப்படிப்பட்ட நேரத்தில் உலகத்தை விட்டு சென்றார்கள் என்றால் அப்போது லட்சக்கணக்கான மனிதர்கள் ஷிர்க் மற்றும் சிலை வணக்கத்தை கைவிட்டு விட்டு ஏகத்துவம் மற்றும் நேர்வழியை மேற்கொண்டிருந்தார்கள். உள்ளடிபயே இந்த முழுமையான சீர்திருத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே சார்ந்ததாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை கொண்டிருந்த சமுதாயத்தையும், விலங்குகளின் பண்புகளைக் கொண்டிருந்த சமுதாயத்திற்கும் மனிதனுக்குரிய பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். அல்லது வேறொரு சொற்களில் இவ்வாறும் கூறலாம். விலங்குகளை மனிதர்களாக்கினார்கள். பின்னர் மனிதர்களிலிருந்து பண்பட்ட மனிதர்களாக மாற்றினார்கள். பின்னர் பண்பட்ட மனிதர்களிலிருந்து இறை அடியாராக மாற்றினார்கள். மேலும் அவர்களிடத்தில் ஆன்மீகத் தன்மைகளை ஊதினார்கள். மேலும் உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தினார்கள். அவர்கள் இறைவனின் வழியில் ஆடுகளைப் போன்று பலியிடப்பட்டார்கள். எறும்புகளைப் போன்று கால்களில் நசுக்கப்பட்டார்கள். ஆயினும் ஈமானை கைவிட்டு விடவில்லை.

இன்னும் கூறப்போனால் ஒவ்வொரு துன்பத்திலும் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். எனவே சந்தேகத்திற்கிடமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மீகத்தை நிலைநாட்டியதன் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக திகழ்ந்தார்கள். இன்னும் கூறப்போனால் உண்மையான ஆதமாகவே இருந்தார்கள். அன்னாரின் மூலமும் மேலும் அன்னாரின் காரணமாகவும் அனைத்து மனித சிறப்புகளும் எல்லையை அடைந்தன. அனைத்து நல்ல ஆற்றல்களும் தத்தமது பணியில் ஈடுபட்டன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் வீணானதாக இருக்கவில்லை.

கத்மே நுபுவ்வத் என்பது வெறும் காலத்தின் அடிப்படையில் மட்டும் அன்னாருடன் நிறைவடையவில்லை. மாறாக, அனைத்து நபித்துவ சிறப்புகளும் அன்னார் மீது நிறைவடைந்து விட்டதன் காரணமாகவும் முழுமை பெற்றுள்ளது. ஏனென்றால் அன்னார் இறைப் பண்புகளின் முழுமையான வெளிப்பாடாக இருந்தார்கள். எனவேதான் அன்னாரின் ஷரீஅத் கம்பீரம் மற்றும் அழகு என்ற இரண்டு பண்புகளையும் கொண்டிருந்தது. முஹம்மது மற்றும் அஹ்மது (ஸல்) என்ற இரண்டு பெயர்களும் இதன் காரணமாகவே அன்னாருக்கு வைக்கப்பட்டுள்ளன. அன்னாரின் பொதுவான நபித்துவத்தில் எந்தவொரு பகுதியிலும் கருமித்தனம் இல்லை. மாறாக, ஆரம்பம் முதல் முழு உலகிற்காகவும் உள்ளது.

(லெக்சர் ஸியால்கோட், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 206)

# மன்னிப்பின் மூலம் அநீதியை பழி தீர்த்தீர்கள். அலைக்கஸ் ஸலாத்து அலைக்கஸ் ஸலாம்

## ஹஸ்ரத் நபி [ஸல்] அவர்களின் மகத்தான மன்னித்தல் மற்றும் பரிவும் – கண்டும் காணாமல் இருத்தல்

மவ்லானா மன்சூர் அஹ்மத் மஸ்ரூர் சாஹிப் காதியான்

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ

(நபியே! எப்போதும்) மன்னிப்பைக் கடைபிடிப்பீராக. இயல்பிற்கேற்ற செயலைப் போதிப்பீராக. அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்புவீராக. (7:200)

அல்லாஹ்வின் இந்தக் கட்டளை மற்றும் இதுபோன்ற பல கட்டளைகளின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்தல் மற்றும் பரிவு காட்டுவதில் பிற நபிமார்களின் வரலாற்றில் காண முடியாத ஒப்பற்ற உதாரணத்தை நிலைநாட்டி உள்ளார்கள். மன்னித்தல் மற்றும் பரிவு காட்டுதலில் இவ்வாறான உதாரணங்களும் உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ளதா என்று ஒரு சாதாரண மனிதனுடைய சிந்தனையிலும் புத்தியிலும் தோன்றாத அளவிற்கு அன்னாரின் செயல் இருந்தது. மேலும் அன்னாரைத் தவிர வேறு எவரும் மன்னித்தல் மற்றும் பரிவு காட்டுவதில் இவ்வாறான உயர்ந்த படித்தரத்தை அடைய முடியாது. சிறிய சிறிய கொடுமைகள் எல்லாம் ஒன்றுமில்லை. அன்னார் பெரிய பெரிய கொலையாளிகள், கொடுமையாளர்கள் மற்றும் அநீதியின் அனைத்து வரம்புகளையும் மீறியவர்களையும் மன்னித்தார்கள். நம்முடைய எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க மன்னித்தல் மற்றும் பரிவிற்கான ஒப்பற்ற சில சம்பவங்களை எழுதுகிறேன்.

குரைஷிய நிராகரிப்பாளர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் நடைபெற்ற மாபெரும் போராக பத்ர் போர் இருந்தது. அந்தப் போரில் காஃபிர்களின் வேர் துண்டிக்கப்பட்டது. மேலும் காஃபிர்களின் 70 நபர்கள் கைதிகளாக பிடிக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விரோதிகள் மற்றும் இரத்த வெறியர்களை மன்னித்து பரிவுடன் நடந்து கொண்ட விதமானது பாராட்டக்கூடியதும் போற்றத் தகுந்ததும் ஆகும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் MA (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்தப் போர் கைதிகளில் குரைஷியர்களின் தலைவராக ஸுஹைல் பின் அம்ர் என்பவரும் இருந்தார். அவர் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் பேசக்கூடிய பேச்சாளராக இருந்தார். பொதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக அவர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். அவர் பத்ர் போரில் கைதியாக்கப்பட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஸுஹைல் பின் அம்ர் தங்களுக்கு எதிராக விஷத்தை உமிழாதிருக்க அவனுடைய முன் வரிசை பற்களை பிடுங்கி விடுவோம் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆலோசனையை கடுமையாக வெறுத்தார்கள். அத்துடன் இவ்வாறு கூறினார்கள்: உமரே! உமக்கு என்ன தெரியும்? இறைவன் பிற்காலத்தில் இவரை புகழுக்குரிய இடத்தில் நிற்க வைக்கலாம்.

அதேபோன்று மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் ஸுஹைல் முஸ்லிமாகி விட்டார். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஸுஹைல் அவர்கள் தன்நிலை அறியாது குழப்பத்திலிருந்த மக்களை காப்பாற்றுவதற்காக இஸ்லாத்திற்கு உதவி செய்தவாறு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதன்மூலம் தடுமாற்றத்தில் இருந்த மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்

இந்த ஸுஹைல் தொடர்பாகத் தான் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஸுஹைல், அபூசுஃப்யான் மற்றும் மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்காவின் சில தலைவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக சென்றார்கள். அப்போது அங்கு எதிர்பாராத விதமாக ஹஸ்ரத் பிலால் (ரலி), ஹஸ்ரத் அம்மார் (ரலி) மற்றும் ஸுஹைப் (ரலி) ஆகியோரும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக வருகை தந்திருந்தார்கள். இவர்கள் மிகவும் ஏழையாகவும் அடிமையாகவும் இருந்தவர்கள். ஆனால் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவர்களின் வருகை தொடர்பான தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) மற்றும் உடன் இருந்தவர்களை முதலில் சந்திப்பதற்காக அழைத்தார்கள். அப்போது அபூசுஃப்யான் அவரிடம் இன்னும் அறியாமையின் இரத்தம் எஞ்சியிருந்த காரணத்தினால் இந்த காட்சியைக் கண்டதும் அவருடைய உடல் கோபத்தில் பற்றி எரிந்தது. அதனால் அவர் நாம் இங்கு காத்துக் கொண்டு இருக்கையில் இந்த அடிமைகள் சந்திப்பிற்கான கண்ணியத்தை பெறுகின்ற இந்த இழிவான காட்சியை தான் நாம் காண வந்தோமா? எனக் கூறினார். அப்போது ஸுஹைல் முன்னால் வந்து இவ்வாறு பதில் கூறினார்: முஹம்மது (ஸல்) அவர்கள் நம் அனைவரையும் இறைவன் பக்கம் அழைத்தார்கள். ஆனால் அவர்கள் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். நாம் பின்தங்கி விட்டோம். அவ்வாறிருக்க நம் மீது அவர்களுக்கு ஏன் சிறப்புத்தன்மை இருக்காது?

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 369 – 2004 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அதேபோன்று குரைஷியர்களில் உமைர் பின் வஹப் மற்றும் ஸஃப்வான் பின் உமைய்யா பின் கல்ஃப் போன்ற பெரும் உறுதிவாய்ந்த நபர்கள் இருந்தார்கள். கஃபாவின் முற்றத்தில் அமர்ந்து கொண்டு பத்ர் போரில் மரணித்தவருக்கான துக்கத்தை அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஸஃப்வான் என்பவன் உமைரைப் பார்த்து, இனி வாழ்வதில் அர்த்தமே இல்லை என்று கூறினார். உமைர் சைகை செய்தவாறு நான் என்னுடைய உயிரை பணயம் வைப்பதற்கு ஆயத்தமாக தான் இருக்கிறேன். ஆனால் குழந்தைகள் மற்றும் கடனின் சிந்தனையானது என்னை தடுக்கின்றது. அவ்வாறில்லையென்றால் மதீனா சென்று மறைமுகமான முறையில் முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்து விட்டு வருவதென்பது ஒரு சாதாரண விஷயம் ஆகும். மேலும் என் மகன் அங்கு அவரிடம் கைதியாக இருககின்ற இந்த ஒரு காரணமே எனக்குப் போதுமானது என்று பதிலளித்தார். இதற்கு ஸஃப்வான், உன்னுடைய கடன் மற்றும் குழந்தைகளுக்கு நான் பொறுப்பேற்கிறேன். நீ கண்டிப்பாக சென்று இந்த பணியை எப்படியாவது முடித்து விடு என்று கூறினான். ஆக (அவர்களின்) திட்டம் உறுதியானது. மேலும் ஸஃப்வானிடமிருந்து உத்தரவு பெற்று தன்னுடைய வீட்டிற்கு வந்த உமைர் ஒரு விஷம் தடவிய வாளை எடுத்துக் கொண்டு மக்காவிலிருந்து வெளியேறி மதீனா சென்றடைந்ததும் இது போன்ற விஷயங்களில் மிகவும் திறமையாக செயல்படுகின்ற ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனைக் கண்டதும் அச்சத்திற்கு உள்ளானார்கள்.

மேலும் அடுத்த கணமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று உமைர் வந்துள்ளான். அவனுடைய விவகாரத்தில் எனக்கு பதட்டமாகவே இருக்கின்றது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனை அழைத்து வருவதற்காக சென்றபோது வழியில் சஹாபிகளிடம் நான் உமைரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்து வர செல்கிறேன். ஆனால் எனக்கு அவனுடைய செயல் மீது சந்தேகம் இருக்கின்றது. எனவே நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்று அமர்ந்து கொள்ளுங்கள். மேலும் விழிப்போடு

இருங்கள் என்று கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உமைரை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமைருடன் மிகவும் மென்மையாக நடந்து கொண்டவாறு தன்னருகில் அமர வைத்து, உமைரே! (இங்கு) எவ்வாறு வர நேர்ந்தது? என்று கேட்டார்கள். அதற்கு உமைர், என் மகன் உங்களுடைய கைகளால் கைது செய்யப்பட்டுள்ளான். அவனை விடுவிப்பதற்காக நான் வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறகு இந்த வாளை ஏன் ஏந்தி உள்ளீர்? என்று கேட்டார்கள். நீங்கள் வாளைப் பற்றி ஏன் கேட்கின்றீர்கள். பத்ர் போரில் வாள்கள் என்ன பணி செய்தது என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இல்லை. நீ எதற்காக வந்துள்ளாய் என்ற சரியான காரணத்தைக் கூறவும்? என்று கேட்டார்கள். அதைத்தான் நான் கூறி விட்டேனே. என் மகனைவிடுவிப்பதற்காகவே நான் வந்துள்ளேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்படி என்றால் நீ ஸஃப்வானுடன் இணைந்து கஃபாவின் முற்றத்தில் எந்த ஒரு சதித் திட்டத்தையும் தீட்டவில்லையா? எனக் கேட்டார்கள். அதைக்கேட்டதும் அச்சத்தில் அமைதியாகிவிட்ட அவர் சுதாரித்துக் கொண்டு, இல்லை. நான் எந்த ஒரு சதித் திட்டத்தையும் தீட்டவில்லை என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்னை கொலை செய்வதற்கான திட்டத்தை தீட்டவில்லையா? நினைவிற் கொள்ளுங்கள். என்னை நெருங்குகின்ற பாக்கியத்தை இறைவன் உங்களுக்கு கொடுக்க மாட்டான் என்று கூறினார்கள். உமைர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்ட பிறகு நீங்கள் உண்மையை கூறுகின்றீர்கள். நாங்கள் உண்மையாகவே அச்சமயத்தில் இந்த திட்டத்தை தான் தீட்டினோம். ஆனால் இறைவன் உங்களுடன் இருக்கின்றான் என்பது தெரிகிறது. அந்த இறைவன் தான் உங்களுக்கு எங்களுடைய திட்டங்கள் தொடர்பாகவும் அறிவித்துள்ளான். ஏனென்றால் நானும் ஸஃப்வானும் இந்த திட்டம் தீட்டிக் கொண்டிருந்த அந்த இடத்தில் மூன்றாவதாக வேறு எந்த நபரும் இல்லை. ஒருவேளை நான் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதற்காகவே இறைவன் அவ்வாறு செய்திருக்கலாம். மேலும் நான் உண்மையான மனதுடன் தங்கள் மீது நம்பிக்கை கொள்கிறேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமைர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் சஹாபிகளிடம், தற்போது இவர் உங்களுடைய சகோதரர் ஆவார். அவருக்கு இஸ்லாமிய போதனைகளை கற்றுக் கொடுங்கள். மேலும் அவருடைய கைதியை விட்டுவிடுங்கள் என்று கூறினார்கள். ஆக உமைர் பின் வஹப் முஸ்லிம் ஆகிவிட்டார். மேலும் மிக விரைவிலேயே அவர் தன்னுடைய ஈமானிலும் கலப்பற்ற தன்மையிலும் முன்னேறியவாறு இறுதியில் உண்மையின் ஒளியினால ஈர்க்கப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எனக்கு மக்கா செல்வதற்கான அனுமதி வழங்குமாறும், அதன் மூலம் நான் அங்குள்ள மக்களுக்கு தப்லீக் செய்ய விரும்புகிறேன் என்றும் வலியுறுத்தி கேட்டதனாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினார்கள்.

அதன் பிறகு உமைர் அவர்கள் மக்கா சென்று தன்னுடைய உணர்ச்சிப்பூர்வமான தப்லீக்கின் மூலமாக எண்ணற்ற மக்களை மறைமுகமான முறையில் முஸ்லிமாக ஆக்கிவிட்டார். ஸஃப்வான் இரவும் பகலுமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்ட செய்தியை கேட்பதற்காக காத்துக் கொண்டிருந்தான். மேலும் குரைஷிகளிடம் தற்போது நீங்கள் ஒரு நற்செய்தியை கேட்பதற்காக ஆயத்தமாக இருங்கள் எனக் கூறிக் கொண்டிருந்தான். அப்போது ஸஃப்வான் இந்த காட்சியை கண்டதும் சுய நினைவை இழந்தவனைப்போன்று ஆகிவிட்டான். அஹ்ஸாப் போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டில் நடைபெற்றது. நிராகரிப்பாளர்களின் படையின் எண்ணிக்கையானது 20 ஆயிரத்திற்கும் அதிகமாக இருந்தது. முழு அரபு நாடே மதீனாவின் மீது படையெடுத்ததுபோன்று இருந்தது. இது எந்த அளவிற்கு அபாயகரமான போராக இருந்தது என்றால் திருக்குர்ஆன் இந்த போரின் கடினம் மற்றும் வலிமையின் வரைபடத்தை ஒரு வரியில் இவ்வாறு கூறுகின்றது:

اِذْ جَآءُوْكُمْ مِّنْ فَوْقِكُمْ وَمِنْ اَسْفَلَ مِنْكُمْ وَاِذْ زَاغَتِ الْاَبْصَارُ
وَبَلَغَتِ الْقُلُوْبُ الْحَنَاجِرَ وَتَظُنُّوْنَ بِاللّٰهِ الظُّنُوْنَا ○ هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُوْنَ
وَزُلْزِلُوْا زِلْزَالًا شَدِيْدًا

அவர்கள் உங்களிடம், உங்களுக்கு மேலிருந்தும் (அதாவது மலை வழியாகவும்), உங்களுக்குக் கீழேயிருந்தும் (தரை வழியாகவும்) வந்த நேரத்தையும், (உங்கள்) கண்கள் பதற்றமடைந்த நேரத்தையும், (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைத்த நேரத்தையும், நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). அந்த நேரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பெரும் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு, கடுமையான அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டனர். **(33:11)**

இப்படிப்பட்ட கடினமான நேரம் மற்றும் இக்கட்டான சூழலில் பனூ குரைலா கோத்திரத்தினர் நம்பிக்கை துரோகம் செய்ததுடன் முஸ்லிம்களுடன் செய்த உடன்படிக்கையையும் முறித்துவிட்டு இணை வைப்பவர்களுடன் இணைந்து விட்டார்கள். அவர்களின் இந்த நம்பிக்கை துரோகத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப அவர்களின் கோட்டையை முற்றுகையிட்டார்கள். பனூ குரைலா கோத்திரத்தினர் தங்களுடைய ஆயுதங்களை வீசி விட்டு சரணடைந்து விட்டனர். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்றால் நிச்சயமாக அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் அவர்களோ ஸஅது பின் மஆஸ் என்பவரின் தீர்ப்பையே ஏற்றுக் கொள்வோம் என்று வற்புறுத்தியதால் ஸஅது பின் மஆஸ் அவர்கள் தவ்ராத்தின் கட்டளையின் அடிப்படையில் அவர்களின் போர் வீரர்களை கொலை செய்வதற்கான தீர்ப்பை வழங்கினார்கள். அந்த தீர்ப்பானது நிறைவேற்றப்பட்டும் விட்டது.

அச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய மன்னித்தல் மற்றும் பரிவின் சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

பனூ குரைலாவின் தலைவர்களில் ஒருவரான ஸுபைர் பின் பாதியா என்பவர் ஸாபித் பின் கைஸ் என்ற முஸ்லிமுக்கு ஏதோ ஒரு காலத்தில் ஒரு உபகாரம் செய்திருந்தார். அதற்கு பகரமாக ஸாபித் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்த நபரை செய்யும்படி பரிந்துரை செய்தார்கள். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், மிகவும் நல்லது! அவரை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் ஸுபைரிடம் சென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னுடைய பரிந்துரையின் பேரில் உன்னை விடுதலை செய்து விட்டார்கள் என்ற நற்செய்தியை கூறினார்.

அதற்கு ஸுபைர் என்னுடைய மனைவி மக்கள் கைதிகளாக இருக்கின்ற நிலையில் நான் மட்டும் கொலையிலிருந்து விடுபட்டு என்ன செய்வேன்? என கூறினான். ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று ஸுபைர் இவ்வாறு கூறுகிறார் எனக் கூறியதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருடைய மனைவி மக்களையும் விடுதலை செய்யுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் மீண்டும் இந்த நற்செய்தியை ஸுபைரிடம் கூறினார்கள். அதற்கு அவன் என்னுடைய செல்வங்கள் முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலையில் நான் என்னுடைய மனைவி மக்களை மட்டும் வைத்து என்ன செய்வேன்? எனக் கூறினான். ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வேண்டியதற்கு இணங்க அன்னார் (ஸல்) அவர்கள் ஸுபைரின் பொருளையும் திருப்பிக் கொடுக்கும்படி

கட்டளையிட்டார்கள். எனவே ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஸுபைரிடம் சென்று தற்போது உன்னுடைய பொருளும் உனக்கு திருப்பி கொடுக்கப்படும் என்று கூறினார்கள். அதற்கு அவன் எங்களுடைய தலைவர் கஅப் பின் அஸத் மற்றும் அரபு நாட்டின் யூதர்களின் தலைவராகிய ஹுய் பின் அக்தப் ஆகியோரின் நிலை என்ன? என்று கேட்டார். அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் கூறியதற்கு அவர்கள் கொலை செய்யப்பட்டு நான் மட்டும் உயிருடன் இருந்து என்ன செய்வது? என்று கூறியவாறு அவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு சென்று ஸுபைர் வாளுக்கு முன் தன் தலையை கொடுத்து விட்டான்.

கைபர் போரின்போது எம்பெருமானார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மிகுந்த வெறுப்பு மற்றும் வண்மத்தையும் கொண்டிருந்த ஒரு யூதப் பெண் அன்னாரை விஷம் வைத்து கொலை செய்ய முயற்சி செய்தாள். அந்த முயற்சியில் ஒரு சஹாபியின் மரணமும் நிகழ்ந்தது. ஆனால் எவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை பழிவாங்கவில்லை. மாறாக அவளை மன்னித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்தப் போரில் மூன்று வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றுள் மூன்றாவதாக நிகழ்ந்த நிகழ்ச்சியானது, யூதப் பெண் ஒருவள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிராணிகளின் எந்த பாகத்தின் இறைச்சியை அதிகமாக விரும்புவார்கள்? என்று நபித்தோழர்களிடம் கேட்டாள். முன்னஞ்சந்து இறைச்சியை அவர்கள் அதிகம் விரும்புவார்கள் என்று நபித்தோழர்கள் கூறினார்கள்.

இதைக்கேட்டு அவள் ஓர் ஆட்டை அறுத்து இறைச்சித் துண்டுகளைச் சூடான கற்களில் வாட்டி அவற்றிலும் குறிப்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதிகமாக விரும்பி உண்ணக்கூடிய முன்னஞ்சந்து இறைச்சியில் கொடிய விஷத்தை கலந்து விட்டாள். பொழுதடைந்த பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மாலை தொழுகையை நிறைவேற்றி விட்டு தங்களுடைய கூடாரத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது தங்களுடைய கூடாரத்திற்கு பக்கத்தில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டு பெண்ணே எதற்காக இங்கு வந்துள்ளாய்? என்று வினவியதற்கு, அன்னாரிடம் அபுல் காஸிம் அவர்களே! நான் தங்களுக்காக ஒரு அன்பளிப்பு கொண்டு வந்திருக்கிறேன் என்றாள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு நபித்தோழரிடம் இவள் தரும் பொருளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். இதன் பின்னர் அவர்கள் உணவு உண்ண அமர்ந்தவுடன் அவர்கள் உண்ணும் உணவுடன் அந்தப் பெண் அளித்த பொறித்த முன்னஞ்சந்து இறைச்சியும் வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அவர்கள் ஒரு துண்டை சாப்பிட்டார்கள். நபித்தோழர்களுள் பஷீர் பின் பர்ரா பின் மஃரூர் என்பவரும் ஒரு துண்டை சாப்பிட்டார்கள். ஏனைய நபித்தோழர்களும் அந்த இறைச்சியைச் சாப்பிட தொடங்கியபோது. அதை சாப்பிடாதீர்கள். ஏனென்றால் இறைச்சியில் விஷம் கலந்திருக்கிறது என்பதை இந்தக் கை எனக்கு அறிவித்து விட்டது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இது குறித்து இறைவன் அவர்களுக்கு அறிவித்தான் என்பது அதன் பொருள் அல்ல. மாறாக, இது அரபு மக்களின் மொழி வழக்காகும். இதன் பொருள் இந்த இறைச்சியை சுவைத்துப் பார்த்ததும் இதில் விஷம் கலந்திருப்பது எனக்கு தெரிந்து விட்டது என்பதேயாகும்).

எனவே இங்கும் அந்தக் கை கூறியது என்று பொருள் கொள்ளக்கூடாது. எனினும் அந்த இறைச்சியை சுவைத்துப் பார்த்ததினால் எனக்கு தெரிந்தது என்பதே அதன் கருத்து. இந்த கருத்தை அடுத்து வருகின்ற வாசகங்கள் உறுதிப்படுத்துகின்றன. அப்போது பஷீர் பின் பர்ரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தங்களுக்கு மதிப்பளித்த இறைவன் மேல் ஆணையாக கூறுகிறேன். அந்த இறைச்சி துண்டில் விஷம் கலந்திருந்தது எனக்குத் தெரிந்தது. அதனை தூக்கி எறிந்து விட வேண்டும் என்று என் உள்ளம் விரும்பியது. ஆனால் நான் அவ்வாறு செய்தால் தங்களுக்கு வருத்தம் ஏற்பட்டு தாங்கள் உண்பதை நிறுத்தி விடுவீர்களோ என்று நான் நினைத்தேன். அப்போது எனது உள்ளம் இதில் நஞ்சு கலந்திருக்கிறது. இதனை அல்லாஹ்வின் தூதர் சாப்பிடாமல் இருக்க வேண்டுமே என்று நினைத்துக் கொண்டிருந்தபோது தாங்கள் அதனை சாப்பிட்டீர்கள். நானும் தங்களை பின்பற்றி அதனை உண்டேன் என்றார்கள். இதன் பிறகு பஷீர் பின் பரா அவர்களின் உடல்நலம் சீர்குலைந்து விட்டது. சில அறிவிப்புகளில் அவர்கள் கைபரிலேயே அப்போதே மரணமடைந்து விட்டார்கள் என்றும் சில அறிவிப்புகளில் அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். பின்னர் மரணம் அடைந்தார்கள் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அழைத்து வரச் சொல்லி இந்த ஆட்டிறைச்சியில் நீ விஷத்தை கலந்து இருக்கிறாய் என்று கூறினார்கள். இதனை தங்களுக்கு அறிவித்தது யார்? என்று அவள் கேட்டாள். ஆட்டிறைச்சித் துண்டை தமது கையில் வைத்திருந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தக் கை அறிவித்தது என்று கூறினார்கள். தனது இரகசியம் வெளிப்பட்டு விட்டது என்பதை புரிந்து கொண்ட அவள், தானே விஷத்தைக் கலந்ததாக ஒப்புக் கொண்டாள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் அவளிடம், வெறுக்கத்தக்க இந்த செயலை செய்யுமாறு உன்னை தூண்டியது எது? என்று கேட்டதற்கு என் சமுதாயத்துடன் தாங்கள் போர் செய்தீர்கள். என் உறவினர்கள் அந்தப் போரில் கொல்லப்பட்டனர். எனவே நான் தங்களை விஷம் வைத்துக் கொல்ல எண்ணினேன். நீங்கள் பொய்யர் என்றால் இறந்திருப்பீர்கள். தாங்கள் உண்மையிலேயே இறைத்தூதராக இருந்தால் இறைவன் தங்களை காப்பாற்றி விடுவான். மேலும் தாங்கள் என்னை மன்னித்து விடுவீர்கள் என்றும் நான் எண்ணினேன் என பதிலளித்தாள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவளை மன்னித்து விட்டார்கள். மரண தண்டனைக்குரிய குற்றத்தை செய்த அவளுக்கு அந்த தண்டனையை கொடுக்கவில்லை. அந்த நிகழ்ச்சியானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களையும் தங்கள் தோழர்களையும் கொலை செய்ய முனைந்தவர்களை எவ்வாறு மன்னித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஒருவர் உயிருடன் இருப்பது வருங்காலங்களில் உண்மையிலேயே மிக அதிகமான குழப்பங்களுக்கு காரணமாக இருக்கும் என்று தெரிந்தால் மட்டுமே அந்த நபருக்கு மரண தண்டனை அளிப்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கமாக இருந்தது.

(ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, பக்கம் 250–23)

*நபித்துவத்தின் எந்த அளவிற்கு சிறப்பம்சங்கள் உள்ளனவோ*
*அவை அனைத்தும் அனுமானிக்க முடியாத அளவிற்கு*
*தங்களிடத்தில் ஒன்றிணைந்து உள்ளது;*
*அழகென்ற பண்பிலும், கம்பீரத்திலும், அனைத்து*
*தோற்றத்திலும் ஒப்பற்றவராக திகழ்கின்றீர்கள்;*
*மன்னிப்பின் மூலம் அநீதியை பழி தீர்த்தார்கள்;*
*அலைக்கஸ் ஸலாத்து அலைக்கஸ் ஸலாம்.*


எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு நம்முடைய எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை உண்மையான முறையில் நேசிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. இதன் மூலம் நாம் அன்னாரின் போதனைகளை உடலாலும் உயிராலும் செயல்படுத்தக் கூடியவர்களாக திகழ்வோமாக. மேலும் அன்னார் காட்டிய வழிமுறைகளிலிருந்து நாம் முகம் திருப்பாமல் இருப்போமாக. ஆமீன்

وَاٰخِرُ دَعْوٰنَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

மேலும் இறுதியாக எங்களின் முழக்கம் எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தோம்பும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என்பதே.

(தமிழில்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித் சாஹிப்)

## நாங்கள் எங்களது அன்பிற்குரிய எஜமானரை எப்போதும் அழகிய முன்மாதிரியாக எங்களுக்கு ஆக்கிக் கொள்வோம்




ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எங்களது வழிகாட்டியாகவும், தலைவராகவும் ஒப்புக் கொண்டுள்ளோம். மேலும் எங்களது கருணைமிகு இறைவனின் கட்டளையின் அடிப்படையிலும் மேலும் அவனது திருப்தியை பெறுவதற்காகவும் இந்த உடன்படிக்கையை செய்துள்ளோம். அதாவது நாங்கள் எங்களது அன்பிற்குரிய எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எப்போதும் எங்களுக்கு அழகிய முன்மாதிரியாக ஆக்கிக் கொள்வோம். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் தூய இயல்பில் அல்லாஹ் எந்த நிறத்தை வடித்துள்ளானோ அதே நிறத்தை எங்களது இயல்புகளிலும் எங்களது வாழ்க்கைகளிலும் வடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் அது இறை பண்புகளின் ஒளிகளின் மிக அழகிய நிறமாக இருந்தது.

(குத்பாத்தே நாஸிர் தொகுதி 1 பக்கம் 588, குத்பா ஜுமுஆ 24 பிப்ரவரி 1967)

## உலகின் வேறெந்த ஒளியும் அவருக்கு முன்னால் ஒளிரும் தகுதி படைத்திருக்கவில்லை



ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகியல் அமைப்பில் சூரியனின் உதாரணம் இருப்பதைப் போன்றே ஆன்மீக அமைப்பில் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் இருப்பு உள்ளது. அவர் இறைவனின் ஒளியின் திரையாக இருக்கின்றார். அவரை விட அதிகமான ஒளிமயமான திரைகள் நமது உலகியல் மனிதர்களுக்கு தென்படவில்லை. தென்படவும் முடியாது. மேலும் அது எப்படிப்பட்ட பிரகாசமான ஒளியின் திரை என்றால் அது வெளிப்படும்போது ஒளியுடைய ஒவ்வொருவரும் அதற்கு முன்னிருந்து மறைந்து விடுகின்றார். நிலவும் எஞ்சியிருப்பதில்லை. நட்சத்திரங்களும் மின்னுவதில்லை. உலகின் வேறு எந்த ஒளியும் அவருக்கு முன்னால் ஒளிர்வதற்கு தகுதி பெற்றிருக்கவில்லை. இந்த ஒளியின் பக்கமே நாம் முழு உலகையும் அழைக்க வேண்டும். மேலும் அதற்காகவே நமக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

(குத்பாத்தே தாஹிர், தொகுதி 15 பக்கம் 160, குத்பா ஜுமுஆ 1 மார்ச் 1996)

## விண்ணின் ஒவ்வொரு துகளும் தரூதால் நறுமணம் கமழும் அளவிற்கு உண்மையான உள்ளத்துடன் தரூது ஓதங்கள்



ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது பணியும் ஆகும்..... அதாவது உங்களது துஆக்களில் தரூதை கேடயமாக்கிக் கொள்ளுங்கள். விண்ணின் ஒவ்வொரு துகளும் தரூதால் நறுமணம் கமழும் அளவிற்கு உண்மையான உள்ளத்துடன் தரூது ஓதுங்கள். நமது அனைத்து துஆக்களும் இந்த தரூதின் ஊடகத்தின் வாயிலாக இறைவனின் அவையில் சென்றடைந்து ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அந்தஸ்தை கொண்டதாக இருக்க வேண்டும். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பின் மீது நமக்கு இருக்கும் அன்பு மற்றும் நேசத்தின் வெளிப்பாடாகும். மேலும் இந்த அன்பு அன்னார் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரோடும் இருக்க வேண்டும்.

(குத்பா ஜுமுஆ 24 பிப்ரவரி 2006 – பத்ர் பத்திரிகை 13 ஏப்ரல் 2006)

EDITOR
Moulavi. O.M. MUZZAMMIL AHMAD

SUB EDITOR
Moulavi. Abdurrahman Tahir
Mobile : +91 88381 58410
+91 96774 14441
Email : subeditorbadrtamil@gmail.com
Website: www.akhbadrbadrqadian.in

Registered with the registrar of the newspapers for India at No. PUNTAM /2016/68785

هفت روزه بدر قادیان

Weekly BADAR Qadian
Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Vol. 70 Thursday 30- September - 7- October - 2021 Issue. 39-40

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153 79255
e-mail:managerbadrqnd@gmail.com

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் மேற்கோள்கள்

### உலகின் மாபெரும் சீர்திருத்தவாதியான நபியே எல்லா நபிமார்களிலும் சிறந்தவர் ஆவார்

அசல் உண்மைத்துவம் என்னவென்றால், உலகின் மாபெரும் சீர்திருத்தவாதியான நபியே எல்லா நபிமார்களை விடவும் சிறந்தவர் ஆவார். அதாவது உலகில் நிலவிய மாபெரும் குழப்பத்தின் சீர்திருத்தம் அவரின் கரங்களால் ஏற்பட்டது. தொலைந்துபோன மற்றும் (உலகம்) கண்டிராத ஏகத்துவத்தை அவர் மீண்டும் பூமியில் நிலைநாட்டினார். மேலும் அனைத்து பொய்யான மார்க்கங்களையும் தெளிவான சான்றுகள் மற்றும் ஆதாரங்களால் வீழ்த்தி எல்லா வழிகேட்டிற்குரிய சந்தேகங்களையும் அகற்றி விட்டார். அவர் ஒவ்வொரு நாத்தீகரின் சந்தேகங்களையும் அகற்றினார். மேலும் இரட்சிப்பிற்கான உண்மையான ஏற்பாடுகளை செய்தார்..... உண்மையின் விதிமுறைகளுக்கான போதனைகளை புதுமையாக வழங்கினார்.

(பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 2, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 96 அடிக்குறிப்பு எண்.6)

### உயர்தரமான ஒப்பில்லா தன்மை கொண்ட, தூய உள்ளம் படைத்த நபி

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயர்தரமான ஒப்பிட இயலாத தன்மை பெற்றவரும், தூய உள்ளம் உடையவரும், இறைவனுக்காக உயிரை இழக்க தயாராக இருந்தவரும், மக்களின் உதவி ஒத்தாசைகளை எதிர்பாராமல் இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டவரும் ஆவார்கள். இறைவன் மீதே அவர்கள் உறுதியான நம்பிக்கை வைத்தார்கள். இறைவனின் விருப்பத்திற்காகவும், அவனது மகிழ்ச்சிக்காகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஓரிறை கொள்கையை உலகிற்கு எடுத்துரைப்பதனால் என்னென்ன தீங்குகள் தமக்கு ஏற்படும் என்பதையும், இணை வைப்பவரின் கைகளால் என்னென்ன துன்பமும், துயரமும் நேரும் என்பதையும் அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 2, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 111)

### அவர் அரேபிய நாட்டைச் சேர்ந்த நபியாவார். அவரது பெயர் முஹம்மது (ஸல்) ஆகும். அவர் எவ்வளவு உயர்வான தகுதியை கொண்ட இறை தூதர் ஆவார்

இந்த அரபு நாட்டைச் சேர்ந்த முஹம்மது எனும் பெயருடைய (ஆயிரம் ஆயிரம் அருள்களும், சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியை கொண்ட இறை தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. பிரித்தறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீது) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே. அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவரது உயிர் உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான்.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India Editor:Mansoor Ahmad

جمیل احمد ناصر، پرنٹر و پبلشر نے فضل عمر پرنٹنگ پریس قادیان میں چھپوا کر دفتر اخبار بدر قادیان سے شائع کیا۔ پروپرائیٹر:۔نگران بدر بورڈ قادیان